15 ஆண்டுகள் : உண்மையின் ஒளியெழுச்சி

நன்றி!!! நன்றி!!! நன்றி!!!

நன்றி!!! நன்றி!!! நன்றி!!!

"போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும், தொடர்ந்து செல்வேன், ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் என்றால் எடுத்துரைப்பேன். எவர் வரினும் நில்லேன், அஞ்சேன். சோதனைகள் வந்த போது அதனைச் சாதனையாக்க உறுதுணையாக இருந்த என்னவள் என்னுள் கலந்தவள் என் அன்பு மனைவி விஜிலென்ஸ் டாக்டர் பா.தமிழ் பாரதிக்கும், என் அன்பு வைரக் குழந்தைகளான விஜிலென்ஸ் டாக்டர் A.கிருஷ்ணன் மற்றும் விஜிலென்ஸ் A. துஜிதா அவர்களுக்கும் என் முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நமது விஜயன்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் வாசகர்களுக்கு பெரும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! நன்றி!! நன்றி!!!

தமிழகம், பாண்டிச்சேரி, கர்நாடகா, புதுடெல்லி, கேரளா முழுவதும் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கும் எங்களுடைய நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் வெற்றிகரமாக 14 ஆண்டுகளைக் கடந்து 15 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. இதற்கு முழுமையான காரணம் வாசகர்களாகிய நீங்கள் தான். நீங்கள் அளித்த ஆதரவினால் தான் நாங்கள் மாபெரும் வெற்றியை அடைய முடிந்தது. இதற்கு காரணமான வாசகர்களுக்கும் எங்களது விஜிலென்ஸ் குடும்பத்தின் சார்பாக முதலில் கோடான கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். வாசகர்களாகிய உங்கள் ஆதரவு மற்றும் விற்பனையாளர்கள், நமது பத்திரிக்கை வளர்ச்சியில் ஊன்றுகோலாக இருக்கும் எனது விஜிலென்ஸ் போர்படை தளபதிகளான இணை ஆசிரியர்கள், கௌரவ ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், தலைமை நிருபர்கள், நிருபர்கள், சட்ட ஆலோசகர்கள், ஒளிப்பட நிருபர்கள் என அனைவருக்கும் எனது முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.கத்தி முனையை விட பேனா முனை பெரியது என்றான் ஒரு அறிஞன். அந்த மையிட்ட பேனாவால் நமது விஜிலென்ஸ் இதழின் வாயிலாக இந்தச் சமூகத்தில் நடக்கும் அவலங்களையும், அதிகார துஷ்பிரயோகங்களையும் என்னால் முடிந்தவரை சுட்டிக்காட்டி உள்ளேன். இனியும் சுட்டிக் காட்டுவேன். கடந்து வந்த பாதை மிகவும் கரடு முரடான பாதை. தமிழகத்தில் நாள்தோறும் எத்தனையோ பத்திரிகைகள் வந்து கொண்டிருந்தாலும் எங்கள் பத்திரிகைக்கும் நமது விஜிலென்ஸ் வாசகர்களாகிய தாங்கள் தமிழகத்தில் உள்ள பெரும் தேர்வு அளித்து முன்னணி பத்திரிகைகளின் வரிசையில் எங்கள் பத்திரிக்கையையும் இணைத்துள்ளீர்கள். அதற்கு தங்களுக்கு எங்கள் பத்திரிகை சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். வாசகர்கள், அரசு அதிகாரிகள், அரசியல் வாதிகள், காவல் துறையினர்கள், கலைத்துறையினர்கள் என அனைவருக்கும் நமது விஜிலென்ஸ் பத்திரிக்கை சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தங்களது ஆதரவினைத் தொடர்ந்து தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அனைவருக்கும்
இனிய சுதந்திர தின
நல்வாழ்த்துக்கள்..



ஏன்றும் பத்திரிகை நலனில்

நவீன பத்திரிக்கை உலகின் தந்தை, வித்தகன், சாதனைத் தமிழன், சேவா ரத்னா,

AMBASADOR விஜிலென்ஸ் DR.D. ஆனந்தன் துரைராஜ்.,

M.A.,M.A.,Ph.D.,Dip Agri ,HDSE ,HCC ,

நிறுவனர்/வெளியீட்டாளர்/ஆசிரியர் - நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ்,

விஜிலென்ஸ் டிவி - MD

விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் , விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை - நிறுவனத் தலைவர், குறும்படத் தயாரிப்பாளர்

கைபேசி & வாட்ஸ்அப் : 89734 15000



TNEB தலைவர்

வி.அருண் ராய், IAS

தமிழ்நாடு மின் வாரியத்தின் (TNEB/TANGEDCO) புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள வி. அருண் ராய், இந்திய ஆட்சிப் பணி (IAS) திறமையான நிர்வாகம், தொலைநோக்குப் பார்வை மற்றும் வளர்ச்சி சார்ந்த அணுகுமுறைக்காக அறியப்படும் மூத்த நிர்வாக அதிகாரிகளில் ஒருவர்.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேடர் IAS அதிகாரியான அருண் ராய் சட்டப் பட்டதாரி (B.A., B.L.) ஆவார். தமிழக அரசின் பல்வேறு முக்கியத் துறைகளில் பணியாற்றி நிர்வாக அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

அவரது பணிக்காலத்தில், நிதித்துறை, சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) துறை செயலாளர், தொழில், முதலீட்டு மேம்பாடு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் உள்ளிட்ட பல முக்கிய பொறுப்புகளைத் திறம்பட வகித்துள்ளார்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு (Global Investors Meet) தொடர்பான பணிகளிலும் முக்கிய பங்காற்றியவர்.தொழில் முதலீடுகளை ஈர்ப்பது, நிர்வாகச் சீர்திருத்தங்கள், விரைவான முடிவெடுக்கும் திறன் மற்றும் வெளிப்படையான நிர்வாகம் ஆகியவற்றில் தனித்துவமான முத்திரை பதித்த அதிகாரியாக அருண் ராய் மதிக்கப்படுகிறார். பல்வேறு துறைகளில் பணியாற்றிய அனுபவம், மின்துறையின் எதிர்கால வளர்ச்சிக்கும் பயனளிக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. மின் உற்பத்தி, மின் விநியோகம், கட்டமைப்பு மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒருங்கிணைப்பு, நுகர்வோர் சேவை மேம்பாடு மற்றும் நிதி ஒழுங்குமுறை ஆகிய துறைகளில் அவரது நிர்வாக அனுபவம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு புதிய முன்னேற்றப் பாதையை உருவாக்கும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது.

அருண் ராய் ஐஏஎஸ், 2003 ஆம் ஆண்டு தமிழக கேடரைச் சேர்ந்த மூத்த ஐஏஎஸ் அதிகாரி. கேரளாவைச் சேர்ந்த இவர், மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் சரளமாகப் பேசும் திறன் பெற்றவர்.

பற்றி ஒரு சிறப்புப் பார்வை..

தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் (BA., LLB) சட்டப் படிப்பை முடித்துள்ள இவர், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் பல்வேறு முக்கிய நிர்வாகப் பொறுப்புகளில் பணியாற்றி, மக்கள் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறார்.

மக்கள் நலப் பணிகளில் சிறப்பான பங்களிப்பு: 2004 ஆம் ஆண்டு பயிற்சி அதிகாரியாக இருந்தபோதே கடலூர் சுனாமி பேரிடர் காலத்தில் தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைத்து, வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முக்கியப் பங்காற்றினார். தொடர்ந்து, 2005 ஆம் ஆண்டு சிதம்பரம் வெள்ளப் பாதிப்பின் போது சார் ஆட்சியராக இருந்து துரித மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் திறம்பட முன்னெடுத்தார்.

சென்னை குடிநீர் நெருக்கடிக்குத் தீர்வு : 2017 ஆம் ஆண்டு சென்னை கடுமையான வறட்சியை எதிர் கொண்டபோது, சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண் இயக்குநராக இருந்த அருண் ராய், சிக்கராயபுரம் பகுதியில் கைவிடப்பட்டிருந்த 22 குவாரிகளில் தேங்கியிருந்த

நீரைச் சுத்திகரித்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு கொண்டு செல்லும் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தினார். இதன் மூலம் தினமும் சுமார் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை மக்களுக்கு கிடைக்க வழிவகுத்தார். இது அவரது நிர்வாகத் திறனை வெளிப்படுத்திய முக்கிய சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

பல்வேறு துறைகளில் சிறப்பான நிர்வாகம் : அருண் ராய் கடலூர் துணை ஆட்சியராகவும், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியராகவும், நில வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளில் முக்கிய பொறுப்புகளிலும், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை ஆணையராகவும், சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் மேலாண் இயக்குனராகவும் போன்ற பல்வேறு பொறுப்புகளில் திறம்பட வகித்துள்ளார்.

தொழில் வளர்ச்சிக்கான பங்களிப்பு :

2018 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் சிறப்பு அதிகாரியாகச் செயல்பட்டு, தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்க்க முக்கிய பங்காற்றினார். பின்னர் தொழில்துறை செயலாளராகத், தமிழகத்தை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் அரசின் இலக்கை முன்னெடுக்கும் பணிகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினார்.

மின்வாரியத்திற்கு புதிய பொறுப்பு : தற்போது தமிழ்நாடு மின்வாரியத்தின் (TANGEDCO) தலைவராக அருண் ராய் ஐஏஎஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அமைதியான, திட்டமிட்ட மற்றும் வெளிப்படையான நிர்வாக அணுகுமுறையால் சிறு சிறு மாற்றங்களை நீடித்த பலன்களாக மாற்றும் திறன் கொண்ட அதிகாரி என்ற பெயரை அவர் பெற்றுள்ளார்.

அருண் ராய் போன்ற உயர்ந்த திறமையும், நேர்மையும், நிர்வாக அனுபவமும் கொண்ட அதிகாரி உயர்கல்வித் துறையிலிருந்து மாற்றப்படுவது அந்தத் துறைக்கு ஒரு இழப்பாகக் கருதலாம். உயர்கல்வி நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள், வெளிப்படைத்தன்மை மற்றும் தர உயர்வுக்கான முயற்சிகளில் அவரது அனுபவம் மேலும் பயன்பட்டிருக்க வாய்ப்பிருந்தது.

அதே நேரத்தில், பல்வேறு சவால்களை எதிர்கொண்டுவரும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு அவரைப் போன்ற திறமையான நிர்வாகி கிடைத்திருப்பது ஒரு சிறந்த வாய்ப்பாகும். அவரது அனுபவம், நேர்மை மற்றும் தொலைநோக்கு நிர்வாகத்தின் மூலம் மின்வாரியத்தில் பல்வேறு சீர்திருத்தங்களும், மக்கள் மையப்படுத்தப்பட்ட சேவைகளும் வலுப்பெறும் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

தமிழ்நாடு மின் வாரியத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள வி. அருண் ராய், மிகிஷி க்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதுடன்,அவரதுதலைமையில்தமிழ்நாட்டின் மின்துறை மேலும் பல சாதனைகளைப் படைக்க நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் , விஜிலென்ஸ் டிவி , விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் . விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனதார வாழ்த்துகிறோம்.











கோபி குமார்

அந்தியூர் வேம்பத்தி ஊராட்சி அலுவலகத்தில் போலியான குடிநீர் ரசீது,வீட்டு வரி ரசீது கொடுத்து மக்களிடம் பல ஆயிரங்கள் சுருட்டல்

நடவடிக்கை எடுக்குமா? மாவட்ட நிர்வாகம்?..

ஈரோடு மாவட்டம் அந்தியூர் ஒன்றியத்தில் வேம்பத்தி என்ற ஊராட்சி உள்ளது. பொதுவாக அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல மோசடிகள் நடைபெறுகிறது என்ற தகவலை பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் சொல்லி வந்தனர். இந்த மோசடிகளை விசாரிப்பதற்காக நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் சார்பாக களத்தில் இறங்கினோம். அப்போது தான் ஒரு குறிப்பிட்ட ஊராட்சி வேம்பத்தியில் மட்டும் பல ஆயிரங்கள் முதல் லட்சம் வரை முறைகேடுகள் நடைபெற்றதைக் கண்டறிந்து கடந்த பிப்ரவரி மாத இதழில் வெளிப்படுத்தி இருந்தோம். அதன் தொடர்ச்சியாக ஊராட்சிகளில் எந்தவிதமான ஊழல் நடைபெறுகிறது என்பதை கண்டறிய களம் இறங்கினோம். அதில் பல ஊராட்சிகளில் முறைகேடுகள் அரங்கேறியுள்ளது.

அதில் வேம்பத்தி ஊராட்சியில் மட்டும் நடந்த முறைகேடுகளை ஆதாரத்தோடு வெளியிடுகிறோம். முதலாவதாக கலைஞரின் கனவு இல்லம் 2024ன் படி திட்டத்திற்காக பயனாளிகள் தேர்வு செய்யப்பட்ட போது ஒரு நபருக்கு பாத்தியப்படாத இடத்தில் மேற்படி திட்டத்தின்படி வீடு கட்ட அனுமதி அளித்து அதற்கான தொகை ரூபாய் 3 லட்சத்து 50 ஆயிரத்தை அவரது வங்கிக் கணக்கில் வரவு வைத்து அதற்கு கையூட்டாக அப்போது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக இருந்த சரவணன் மற்றும் ஊராட்சி செயலர் இருவரும் சேர்ந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் வரை லஞ்சமாக பெறப்பட்டதாக கூறப்படுகிறது. இதற்கான ஆதாரத்தையும் தெளிவாக வெளியிட்டு இருந்தோம். அதே வேளையில் மேலும் பலவிதமான முறைகேடுகள் நடைபெறுவதாக தகவல் வந்ததை அடுத்து, விசாரித்த வகையில் பல நபர்களுக்கு குடிநீர் ரசீதும், வீட்டு வரி ரசீதும் போலியாக போட்டுக் கொடுத்து பல ஆயிரங்கள் மோசடி செய்து இருப்பதாக


தெரிய வருகிறது. அதில் வேம்பத்தி ஊராட்சியில் நந்தகோபால், ஈஸ்வரன், நந்தினி, முருகன், முருகேசன் போன்ற நபர்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் ஒரு சிலருக்கு அவர்கள் பெயரில் இடம்


இல்லாமலேயே கலைஞர் கனவு இல்லம் ஒதுக்கப்பட்டு முறைகேடு நடைபெற்றது மட்டுமல்லாமல் போலியாக குடிநீர் கட்டண ரசீது, வீட்டு வரி ரசீது போட்டுக் கொடுத்து அதை அரசு கஜானாவில் சேர்க்காமல் மோசடி செய்துள்ளனர். போலியான ரசீதுகளை அச்சடித்து பொதுமக்களிடம் கொடுத்து அவர்களிடம் பெற்ற பணத்தை யார் யார் பங்கு போட்டது. அப்போதைய வட்டார வளர்ச்சி அலுவலர் பஞ்சாயத்து இணை இயக்குனர்களுக்கு பங்கு உள்ளதா என்ற சந்தேகம் வருகிறது.


இவ்வளவு பெரிய மோசடியை செய்து அரசுக்கு பல லட்சங்கள் வருவாய் இழப்பு ஏற்படுத்தி கஜானாவை காலி செய்தது யார்? போலியான ரசீதுகளை அச்சடித்து கொடுத்தது யார்? இதில் யார் யார் சம்மந்தப்பட்டு இருப்பார்கள் என்ற விபரங்களை அறிந்து கொள்ள பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் ஆவலோடு எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றனர். இப்படி போலியாக வீட்டு வரி ரசீது,குடிநீர் ரசீது அடித்து மோசடி செய்தது போல் வேறு எந்தெந்த ரசீதுகள் போலியாக அச்சடித்து மக்களிடம் மோசடி செய்துள்ளனர் என்ற விபரத்தையும் விசாரிக்க வேண்டும். போலி ரசீது கொடுத்து மக்களை ஏமாற்றி அரசு கஜானாவை காலி செய்த நபர்கள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி போலியாக வாங்கிய ரசீதுகளை மக்கள் எங்கெங்கெல்லாம் கொடுத்து யார் யார் எல்லாம் ஏமாற்றப்பட்டு உள்ளார்கள் என்பதையும் விசாரிக்க வேண்டும்.

போலியான ரசீது என்பது தெரியாமலேயே மின் இணைப்பு பெறுவது முதல் வங்கியில் கடன் வாங்குவது வரை எங்கெங்கெல்லாம் இந்த ரசீதுகளை மக்கள் பயன்படுத்தி உள்ளனர் என்ற விபரத்தையும் விசாரிக்க வேண்டும்.

மேற்படி கூறிய நபர்களுக்கு வீட்டு வரி ரசீது,குடிநீர் வரி ரசீது ஏதும் போடவில்லை என்ற தகவலை சம்மந்தப்பட்ட நிர்வாகமே தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 ன் கீழ் வழங்கி இருக்கிறது. அப்படி இருக்கையில் எப்படி இந்த குடிநீர் இணைப்பு, வீட்டு வரி ரசீதுகள் போட்டார்கள். இப்படி எத்தனை நபர்களுக்கு போட்டு எத்தனை ஆயிரங்கள் மோசடி செய்தார்கள் என்ற விவரத்தை மாவட்ட நிர்வாகம் விசாரித்து மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்திய அதிகாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று பொது மக்களோடும் சமூக ஆர்வலர்களோடும் சேர்ந்து நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.









சென்னை வினோத் குமார்

வட மாநில சைபர் குற்றவாளிகளைத் தட்டி தூக்கிய சென்னை மாநகர காவல் துறை.....



சென்னை மாநகர காவல் ஆணையாளர் அமல்ராஜ் உத்தரவின் பேரில், பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு வந்த சைபர் குற்றக் கும்பலைச் சேர்ந்த நபர்களைத் தீவிர விசாரணை மற்றும் தொடர் நடவடிக்கைகள் மூலம் கண்டறிந்து கைது செய்து, அவர்களின் குற்ற வலையமைப்பை சென்னை காவல்துறை முறியடித்துள்ளது.

சென்னை நகரில் நடந்த 8 சைபர் மோசடி வழக்குகளில் மொத்தம் ₹31.10 கோடி மோசடி செய்யப்பட்டதாக ப் போலீசார் தெரிவித்துள்ளனர். இதற்காக 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான் ஆகிய 5 மாநிலங்களில் சோதனை நடத்தப்பட்டது. இந்த நடவடிக்கையில் 14 பேர் கைது செய்யப்பட்டு சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். விசாரணையில், ஒரு 'டிஜிட்டல் கைது' மோசடி வழக்கில் மட்டும் ₹14.74 கோடி பறிக்கப்பட்டது தெரியவந்துள்ளது. கைதானவர்களின் வங்கி பரிவர்த்தனைகளை ஆய்வு செய்ததில் ₹4.78கோடி மோசடி பணத்தின் தடயங்கள் கண்டறியப்பட்டன. மேலும் நீதிமன்ற உத்தரவின் பேரில் ₹1.94 கோடி பாதிக்கப்பட்டவர்களுக்கு மீட்டுத் தரப்பட்டுள்ளது.முக்கிய குற்றவாளியாக கருதப்படும் இனாவோபி சிங் என்பவர் பெங்களூருவில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து செல்போன்கள், சிம் கார்டுகள், டேப்லெட், 23 ஏடிஎம் கார்டுகள், வங்கி ஆவணங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சென்னை சைபர் கிரைம் போலீசார் ₹31.10 கோடி மதிப்பிலான 8 சைபர் மோசடி வழக்குகளை விசாரித்து, மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் ஆகிய 5 மாநிலங்களில் இருந்து 14 பேரை கைது செய்துள்ளனர். ஒரு "டிஜிட்டல் கைது" மோசடி வழக்கில் மட்டும் ₹14.74 கோடி மோசடி செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களின் வங்கி பரிவர்த்தனைகளை ஆய்வு செய்ததில் ₹4.78 கோடி மோசடி பணத்தின் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ₹1.94 கோடி மீட்டுத் தரப்பட்டுள்ளது.முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் மணிப்பூரைச் சேர்ந்த 35 வயதான நபர் பெங்களூருவில் கைது செய்யப்பட்டார். இவர் டெலிவரி ஊழியர் போல் வேடமணிந்து, மாநிலங்களுக்கு இடையே மோசடி பணம் மற்றும் ஆவணங்களை எடுத்துச் சென்றதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.அவரிடமிருந்து செல்போன்கள், சிம் கார்டுகள், டேப்லெட், 23 ஏடிஎம் கார்டுகள், வங்கி ஆவணங்கள், பாஸ்போர்ட், ஆதார், PAN உள்ளிட்ட பல முக்கிய ஆதாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மோசடி நடந்த விதம் :

* CBI, ED, வருமான வரித்துறை அல்லது போலீஸ் அதிகாரிகள் என போலியாக அறிமுகப்படுத்தி "டிஜிட்டல் கைது" என மிரட்டுதல். அதிக லாபம் தரும் முதலீடு, ஆன்லைன் பங்குச் சந்தை, கிரிப்டோ முதலீடு, போலி வேலைவாய்ப்பு போன்ற பெயர்களில் ஏமாற்றுதல்.போலி வங்கி கணக்குகள் உருவாக்கி, பல கணக்குகள் வழியாக பணத்தை மாற்றி, பின்னர் ரொக்கமாக மாற்றும் முறையில் செயல்பட்டுள்ளனர்.

போலீசாரின் எச்சரிக்கை :

CBI, ED, வருமான வரித்துறை அல்லது போலீசார் யாரும் வீடியோ கால் மூலம் "டிஜிட்டல் கைது" செய்ய மாட்டார்கள். வங்கி விவரங்கள், ATM PIN அல்லது OTP ஆகியவற்றை அதிகாரிகள் ஒருபோதும் கேட்க மாட்டார்கள். அதிக லாபம் தருவதாகக் கூறும் முதலீட்டு இணைப்புகள் மற்றும் தெரியாத நபர்களின் முதலீட்டு ஆலோசனைகளை நம்ப வேண்டாம்.

இதுபோன்ற மோசடியில் சிக்கினால் உடனடியாக 1930 என்ற தேசிய சைபர் உதவி எண்ணை தொடர்புகொள்ள வேண்டும். மேலும், தேசிய சைபர் குற்றப் புகார் இணையதளதில் உடனடியாக புகார் அளித்தால், மோசடி செய்யப்பட்ட பணத்தை முடக்கி மீட்கும்வாய்ப்பு அதிகரிக்கும்.


ஆகவே பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என விஜிலென்ஸ் இதழ் சார்பில் தெரிவித்து கொள்கிறோம்.

மேலும், இந்தச் சிறப்பான நடவடிக்கையை சென்னை மாநகரக் காவல் ஆணையாளர் உத்தரவின் பேரிலும், தேன்மொழி IPS நேர்பார்வையிலும் வெற்றிகரமாக மேற்கொண்டு, சைபர் குற்றவாளிகளைக் கைது செய்த அனைத்து சிறப்புத்துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறையினருக்கும் விஜிலென்ஸ் குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த பாராட்டுகளையும், நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதே அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனும், மக்களின் பாதுகாப்பிற்காக தங்களது மகத்தான மக்கள் பணி மேலும் சிறக்க எங்களது மனமார்ந்த நல்வாழ்த்துகள்..



ஆசிரியர்





இந்தியாவை அதிர வைத்த கரப்பான் பூச்சி கட்சி போராட்டம்..

வீடுகளில் கரப்பான் பூச்சி எப்படி இல்லத்தரசிகளை அதிர வைக்குமோ அதேபோல் தொடங்கி மூன்று மாதங்கள் கூட ஆகாத கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் போராட்டம் இந்தியா முழுவதையும் குறிப்பாக நாடாளுமன்றத்தையும் உலுக்கி விட்டது என்றால் அது மிகை அல்ல. இந்த கரப்பான் பூச்சி ஜனதா கட்சி தொடங்கப்பட்ட பின்னணி மிகவும் சுவாரசியமானதாகும்.

வேலை வாய்ப்பின்மை மற்றும் தேர்வு முறைகேடுகள் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின் போது தலைமை நீதிபதி சூரியகாந்த் நாட்டில் படித்து முடித்து வேலையில்லாமல் இருக்கும் பல இளைஞர்கள் கரப்பான் பூச்சிகளைப் போல திரிகிறார்கள். தங்களுக்கு என்று எந்த தொழிலும் இல்லாததால் அவர்கள் ஊடகம் சமூக ஊடகம் தகவல் அறியும் உரிமைச் சட்ட அலுவலர்கள் என்ற பெயரில் ஒட்டுண்ணிகளாக மாறி ஒட்டுமொத்த சட்ட அமைப்பையும், நீதித்துறையையும் தேவையின்றி தாக்குகிறார்கள் என்று கடுமையான வார்த்தைகளால் சாடினார்.

இளைஞர்களை கரப்பான் பூச்சி என்று வர்ணித்ததால் நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. அதன் தொடர்ச்சியாக கரப்பான் பூச்சி ஜனதா கட்சி என்ற நையாண்டி இயக்கத்தை அமெரிக்காவில் வாழ்ந்த இந்திய இளைஞர் அபிஜித் தீப்கே சமூக வலைத்தளத்தில் தொடங்கினார். இதற்கு நாடு முழுவதும் இளைஞர்கள் மத்தியில் அமோக ஆதரவு கிடைத்தது. தலைமை நீதிபதி சூரியகாந்த் தன் கருத்து தவறாக புரிந்து கொள்ளப்பட்டதாக விளக்கம் அளித்தார். இதற்கு இடையே அபிஜித் தீப்கேயும் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பினார். இந்நிலையில் நீட் தேர்வு வினாத்தாள்கள் கசிந்த பிரச்சனையை கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் கையில் எடுத்து கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தை தொடங்கினர்.

சமூக ஆர்வலர் சோனம் வாங்க கரப்பான் பூச்சி கட்சிக்கு ஆதரவாக அதே கோரிக்கையை முன்வைத்து டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் கடந்த ஜூன் மாதம் 27 ஆம் தேதி உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். அவரது உடல்நிலை மோசமானதால் 21 நாட்களுக்குப் பிறகு கடந்த 18 ஆம் தேதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இதைத்தொடர்ந்து கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் கடந்த இருபதாம் தேதி களம் இறங்கினர். இளைஞர் பட்டாளம் பெருங் கூட்டமாக ஜந்தர் மந்தரில் இருந்து மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கிய இருபதாம் தேதி அன்று நாடாளுமன்றத்தை முற்றுகையிட சென்றனர். இதைத் தடுத்து நிறுத்த போலீசார் தடியடி மற்றும் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதால் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் காயம் அடைந்தனர். எதிர் தாக்குதலால் போலீசாருக்கும் காயம் ஏற்பட்டது. இதனால் அந்தப் பகுதி போர்க்களமானது.

கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் பிரதிகள் மத்திய மந்திரி ஜே.பி. நட்டாவைச் சந்தித்து கல்வி மந்திரி தர்மேந்திர பிரதானின் ராஜினாமாவை வலியுறுத்தி மனு கொடுத்தனர். அந்த ஒரு நாளோடு போராட்டம் முடிந்து விடவில்லை. டெல்லியில் மட்டுமல்லாமல் தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் இளைஞர்களின் போராட்டம் பரவியது. தமிழ்நாட்டிலும் இளைஞர்களின் போராட்டம் விஸ்வரூபம் எடுத்துவிட்டது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இந்த பிரச்சனையால் முடங்கி எந்த அலுவலும் நடக்கவில்லை. ஆக கரப்பான் பூச்சி ஜனதா கட்சி போராட்டம் டெல்லி மட்டுமல்லாமல் நாடு முழுவதும் பெரிய அதிர்வை ஏற்படுத்தி விட்டது. ஊழலுக்கு எதிராக ஜண்டா மந்திரில் தொடங்கிய போராட்டம் எப்படி ஆம் ஆத்மி கட்சியைத் தோன்ற வைத்ததோ அது போல் நையாண்டி இயக்கமாக தொடங்கப்பட்ட கரப்பான் பூச்சி ஜனதா கட்சி அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் அரசியல் கட்சியாக உருவெடுக்குமா என்பது போகப் போக தான் தெரியும்.

குறிப்பு :

கரப்பான் கட்சியின் மூன்று கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

1) போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீதான வழக்குகளை வாபஸ் பெற மத்திய அரசு ஒப்புதல்.

2) தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை நிறைவேறியது. தர்மேந்திர பிரதான் தன் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

3) நீட் வினாத்தாள் கசிவால் உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க மத்திய அரசு ஒப்புதல். மாணவர்களின் போராட்டம் வெற்றி பெற்றது.



நீலகிரி சிவகிருஷ்ணா

"லட்சங்கள் வசூல், ஆனால் ஊதியம் ஆயிரங்கள் தான்?

தனியார் பள்ளி ஆசிரியர்களின் அவல, அலங்கோல நிலை, மனக்குமுறலோடு சில கோரிக்கைகள்..

இன்றைய காலகட்டத்தின் தேவை, தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு நலவாரியம் என, தமிழக அரசுக்கு கோரிக்கை.

தமிழ்நாட்டில் மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், சி. பி. எஸ். இ. மெட்ரிகுலேஷன், ஐ .சி. எஸ். இ. என பல்லாயிரம் தனியார் பள்ளிகள் செயல்படுகின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் ஐம்பது முதல் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். மொத்தமாக மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும், நாட்டின் வளர்ச்சியை ஏற்படுத்த உதவும், பெரும் பணியை ஆற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் இன்றி தொழில்நுட்பத் துறையும் இல்லை, மருத்துவத் துறையும் இல்லை, ஆட்சிப் பணியும் இல்லை. நாட்டின் கல்வி வளர்ச்சியில் எழுபது விழுக்காட்டிற்கும் மேல் தனியார் பள்ளி ஆசிரியர்களின் பங்களிப்பு உள்ளது. ஆனால் அவர்களது வாழ்க்கை நிலை என்ன? என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாக உள்ளது எனக் கூறப்படுகிறது.

புள்ளி விவரம் எடுத்துரைக்கும் உண்மை :

தமிழ்நாட்டில் ஆசிரியரின் சராசரி மாத ஊதியம் ₹21,802. மத்திய இடைநிலைக் கல்வி வாரிய ஆசிரியரின் சராசரி ஆண்டு ஊதியம் ₹3 இலட்சம், அதாவது மாதம் ₹25,000 தொடக்கப்பள்ளி ஆசிரியரின் ஊதியம் ₹14,000 முதல் ₹16,000 வரை. பல மெட்ரிகுலேசன் பள்ளிகளில் புதிதாகப் பணியில் சேருபவரின் ஊதியம் ₹8,000 முதல் ₹12,000 வரை. சில இடங்களில் ₹6,000. சென்னையில் சராசரி ஊதியம் ₹10,000. இது தேசிய சராசரியை விட ஐம்பது விழுக்காடு குறைவாக உள்ளதாம்.

பள்ளிகள் வசூலிக்கும் கல்விக் கட்டணம், ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ₹80,000 முதல் ₹3 இலட்சம் வரை ஆகும். ஆயிரம் மாணவர்கள் உள்ள ஒரு பள்ளி ஆண்டுக்கு பத்து கோடி ரூபாய் கல்விக் கட்டணம் வசூலிக்கிறது. ஆனால் 80 ஆசிரியர்களுக்கு, மாதம் தலா பதினைந்தாயிரம் ரூபாய் ஊதியம் வழங்க சில நிர்வாகங்கள் மனம் இல்லாமல் இருக்கிறது எனக் கூறப்படுகிறது.

பின்லாந்து வழங்கும் பாடம் :

உலக அளவில் கல்வியில் முதலிடம் வகிக்கும் பின்லாந்து நாட்டில், ஆசிரியர் தொழில் மிக உயர்ந்ததாக மதிக்கப்படுகிறது. மருத்துவரை விட ஆசிரியருக்கு அதிக மரியாதை உண்டு எனக் கூறுகின்றனர்.

1. சமூக மதிப்பு : அங்கு ஆசிரியரைச் சமூகத்தின் முதுகெலும்பாகப் போற்றுகின்றனர் எனக் கூறப்படுகிறது.

2. ஊதியம் : இந்திய மதிப்பில் மாதம் இரண்டரை இலட்சம் முதல் மூன்று இலட்சம் ரூபாய் வரை ஊதியம். வீடு, ஊர்தி, ஓய்வூதியம் அனைத்தும் அரசு வழங்குகிறது என கூறப்படுகிறது.

3. தகுதி : அனைத்து ஆசிரியர்களும் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் மற்றும் ஆய்வுப் பணியில் ஈடுபடுகின்றனர் எனக் கூறப்படுகிறது. இதன் விளைவாக பின்லாந்து மாணவர்கள் உலகத் தரத் தேர்வுகளில் முதலிடம் பெறுகின்றனர் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆசிரியர் தொழிலின் மதிப்பு உயரும் போது நாடு முன்னேறுகிறது என்பது நிதர்சனமான உண்மையே.

தமிழ்நாட்டில் தனியார் பள்ளி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் :





1. குறைந்த ஊதியம் : இளங்கலைக் கல்வியல், முதுகலை அறிவியல் பட்டம் பெற்று, ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கும் பன்னிரண்டாயிரம் ரூபாய் ஊதியமே வழங்கப்படுகிறது எனக் கூறப்படுகிறது. இது உணவு விநியோகப் பணியாளர் பெறும் ஊதியத்தை விடக் குறைவு எனப்படுகிறது.

2. சமூகப் பாதுகாப்பு இன்மை : வருங்கால வைப்பு நிதி, பணியாளர் அரசு காப்பீடு, பணிக்கொடை, போனஸ் போன்ற எந்தச் சலுகையும் இல்லை. "விருப்பம் இருந்தால் பணியாற்றுக, இல்லையேல் விலகுக" என்ற மிரட்டல் நிலவுகிறது என பரவலாக கூறப்படுகிறது.

3. மரியாதைக் குறைவு :

பெற்றோர் முன்னிலையிலும், நிர்வாகத்தின் முன்னிலையிலும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் அவமதிக்கப்படுகின்றனர். மாணவரின் மதிப்பெண் குறையும்போது, அதன் முழு பழியும் ஆசிரியர் மீது சுமத்தப்படுகிறது எனவும் கூறப்படுகிறது.

ஆசிரியர் நல வாரியம் அமைக்க வேண்டும் :

தமிழ்நாடு அரசு கட்டுமானத் தொழிலாளர், வேளாண் தொழிலாளர், மீனவர் உள்ளிட்ட பல்வேறு தொழிலாளர் பிரிவினருக்கு நல வாரியம் அமைத்துள்ளது. ஆனால் மூன்று இலட்சம் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் எந்தப் பாதுகாப்பும் இல்லை, நல வாரியமும் இல்லை என கூறப்படுகிறது.

அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் :

1. தனியார் பள்ளி ஆசிரியர் நல வாரியம், உடனடியாக அமைக்கப்பட வேண்டும். வருங்கால வைப்பு நிதி, பணியாளர் அரசு காப்பீடு, மருத்துவக் காப்பீடு ஆகியவை கட்டாயமாக்கப்பட வேண்டும்.

2. குறைந்தபட்ச ஊதியம் :

அரசுப் பள்ளி ஆசிரியர் ஊதியத்தில் அறுபது விழுக்காடு குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். தனியார் பள்ளிகளுக்குக் குறைந்தபட்சம் முப்பதாயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என கேட்கப்படுகிறது.

3. கட்டண ஒழுங்குமுறை : இலட்சக்கணக்கில் கல்விக் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள், தங்கள் வருவாயில் நாற்பது விழுக்காட்டை ஆசிரியர் ஊதியத்திற்கு ஒதுக்க வேண்டும் என்ற சட்டம் இயற்றப்பட வேண்டும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

4. பணிப் பாதுகாப்பு :

தன்னிச்சையாகப் பணியிலிருந்து நீக்கக் கூடாது. பணி நியமன ஆணை, பணிப் பதிவேடு ஆகியவை அனைத்துப் பள்ளிகளிலும் கட்டாயமாக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது. "ஆசிரியருக்கு வழங்கப்படும் ஊதியம் செலவு அல்ல, அது முதலீடு" என்பதை பின்லாந்து நாடு உலகுக்கு உணர்த்துகிறது.

லட்சங்களை வசூலித்து, ஆயிரம் ஊதியம் வழங்கும் வணிக நோக்கம் ஒழிக்கப்பட வேண்டும் எனவும், ஆசிரியர் வாழ்ந்தால் மட்டுமே அடுத்த தலைமுறை வளரும் எனவும், ஆசிரியர் வாடினால் நாடு வாடும் எனக் கூறி வருகின்றனர்.

ஆட்டோ ஓட்டுநர், கூலித் தொழிலாளி, குடிசைத் தொழிலுக்கு நலவாரியம் இருக்கிறது. இவ்வாறு ஆயிரம் அமைப்பு சாரா தொழிலாளத் தோழர்களுக்கெல்லாம் நலவாரியம் தமிழக மற்றும் மத்திய அரசுகளால் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நாட்டின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வரும் தனியார் பள்ளி ஆசிரியர்கள், தங்கள் அடையாளங்களைத் தொலைத்து உள்ளார்கள் என வேதனையோடு கூறப்படுகிறது.

மெத்த படித்த ஆசிரியர், தான் படித்த படிப்பையே மறந்து போகும் அளவுக்கு வேலை பளுவால் மழுங்கடிக்கப்பட்டுளளனர். எனவே, தனியார் பள்ளி ஆசிரியர்கள், இவர்களுக்கு அத்தியாவசிய தேவையான நல வாரியம் அமைக்க மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துவதாக மனக்குமுறலோடு கூறி வருகின்றனர்.

மத்திய மாநில அரசுகள் இந்த ஆசிரியர்களின் கோரிக்கையை சமூக அக்கறையோடு ஏற்று, நிறைவேற்றி கொடுத்தால், பல குடும்பங்களின் மன கஷ்டங்களும், மனக் கவலையும், மனக் குமுறலும் தீர்வதற்கான வாய்ப்பு உண்டாகும் என தாழ்மையோடும், மனிதாபிமானத்தோடும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் கேட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மிக முக்கிய குறிப்பு :

தனியார் பள்ளி ஆசிரியர்கள், தங்களின் அயராது உழைப்பினால் பல பிரமிப்பை ஏற்படுத்தும் அளவிற்கு, அந்தப் பள்ளி மாணவர்கள் மிகச் சிறந்த மதிப்பெண்களைப் பெற உண்மையாக, நேர்மையாகப் பாடு படுகின்றனர் எனவும், அந்தப் பள்ளிகளுக்கு நல்ல தேர்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்து, அந்தப் பள்ளிகளுக்கு சமுதாயத்தில் மிகப்பெரிய நன்மதிப்பைப் பெற்றுக் கொடுக்கின்றனர் என்பதும், தனியார் பள்ளி ஆசிரியர்களின் அயராத உழைப்பினால், பல பள்ளிகளுக்கு நல்ல மதிப்பெண்களும், தேர்ச்சி விகிதமும், மதிப்பு மரியாதையும் பெற்றுக் கொடுத்திருப்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட உண்மை என்பது நிதர்சனமான உண்மையே.

இவ்வாறு தமிழ்நாட்டு மாணவர்களின் நலனில் அக்கறையோடு பணியாற்றும், தமிழ்நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்த பாடுபட்டுக் கொண்டிருக்கும், நேர்மையான தனியார் பள்ளி ஆசிரியர்கள் பலருக்கு, நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் சார்பாக, தொடரந்து உங்கள் கல்விப் பணி சிறக்க எங்கள் நெஞ் சார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.



Dr.R. சிவகுமார் IPS ன் கண்ணொளித் தருவோம் அறக்கட்டளையின் சாதனை..

காவல்துறை இணை ஆணையர் டாக்டர் இரா. சிவகுமார் ஐபிஎஸ் ன் வழிகாட்டிதலின்படி வெற்றிகரமாக 151 ஜோடி கண்களை தானமாக பெற்றுள்ளார்ள்.

கண்ணொளி தருவோம் அறக்கட்டளை அரக்கோணத்தில் கடந்த 2025 ஜூன் மாதத்தில் துவங்கப்பட்டது. இதன் நிறுவனராக டாக்டர்.R.சிவகுமார் IPS, காவல்துறை இணை ஆணையராக இருக்கிறார்.

R.வித்யாசாகர் கண் அளவியல் இளையர் தலைவர், அப்துல் சாஜகான், துணைத் தலைவர் மற்றும் பொருளாளர் ரம்யா இருக்கிறார்.

அரக்கோணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அறக்கட்டளை ஈரோட்டில் கடந்த ஜூன் 13ஆம் தேதி அன்று முறைப்படி பதிவு செய்து தன்னுடைய சேவை திட்டத்தினை வெற்றிகரமாக ஈரோடு, நாமக்கல் மற்றும் சேலம் பகுதிகளில் சீரிய முறையில் களப் பணியாற்றி இதுவரை 150 ஜோடி கண்களை தானமாகப் பெற்று, தேவைப்படுபவருக்கு இலவசமாக வழங்கி உள்ளார்கள்.

மேலும் இந்த அறக்கட்டளை சார்பாக ஏழை எளிய மக்களின் வேண்டுகோளை ஏற்று கண்தானம் செய்தவர்களின் உடல்களை சில நேரத்தில் இலவசமாக உடல் தகனமும் செய்து கொடுக்கிறார்கள்.

அக்னி சின்னசாமி மற்றும் சாரல் கணேசன் இருவரின் ஆலோசனைப்படி வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.இந்தச் சேவை பொதுமக்களின் ஆதரவோடு சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

அறக்கட்டளை சார்பாக 151 ஜோடி கண்களை தானமாக வழங்கிய இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு மனமார்ந்த நன்றி மற்றும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறார்கள் .

கண் தானம் பெற உதவிய திருச்செங்கோடு அரிமா சங்கம், சோழசிராமணி அரிமா சங்கம், ஈரோடு சக்தி அரிமா சங்கம், சங்ககிரி கோட்டை அரிமா சங்கம், ஈரோடு கிழக்கு அரிமா சங்கம், நாமக்கல் மெல்வின் மெட்ரோ அரிமா சங்கம், கரூர் அரிமா

சங்கம், திருச்செங்கோடு ரோட்டரி சங்கம், திருச்செங்கோடு சாந்திவனம் மின் மயானம் நிர்வாகிகள், ஈரோடு ரோட்டரி சென்ட்ரல் ஆத்மா மின் மயான நிர்வாகிகள், சங்ககிரி கண்தானம் அமைப்பு, குமாரபாளையம் ரோட்டரி சங்கம் மற்றும் குமாரபாளையம் ரோட்டரி மின் மயான நிர்வாகிகள் சங்ககிரி மின் மயான நிர்வாகிகள் மற்றும் மேலாளர், நல்லதே நடக்கும் அறக்கட்டளையின் நிறுவனர், நமது கிராமம் முன்னேற்றம் அறக்கட்டளையின் நிறுவனர் – தமிழ்நாடு தன்னார்வலர்கள் அறக்கட்டளையின் தலைவர் மற்றும் நிர்வாகிகள் – NDSO தலைவர் மற்றும் நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

கண் தானம் சேவை திட்டத்தில் ஜாதி, மதம் வேறுபாடு இன்றி அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்றி இன்று மிகப்பெரிய வெற்றியைப் பெற்று தந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

நேரம் காலம் பார்க்காமல் 150 ஜோடி





கண்தானங்களை கண்ணொளி தருவோம் அறக்கட்டளைக்கு பெற உதவிகரமாக இருந்த டாக்டர் V.பன்னீர்செல்வம், நிறுவனர் அரசன் கண் மருத்துவமனை மற்றும் கண் வங்கிக்கு மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறார்கள். அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

மற்றவர்கள் தரும் நன்கொடையின் மூலம் கண் தானம் செய்த ஏழை எளிய மக்களின் உடல் தகனத்திற்கான செலவுகளை அறக்கட்டளை சார்பாக செய்துள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். கண் தானம் செய்யக்கூடிய நபர்களின் உடல் தகனத்தை இலவசமாக செய்து தரும் திருச்செங்கோடு ரோட்டரி சங்க நிர்வாகிகள் திருச்செங்கோடு ரோட்டரி மின் மயானம் நிர்வாகிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

அறக்கட்டளை ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை பயணித்துக் கொண்டிருக்க கூடிய அனைத்து நண்பர்களுக்கும் மற்றும் நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியை நமது விஜிலென்ஸ் இதழ் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறார்கள்.இந்த சாதனை வெற்றியை அனைத்து நல் உள்ளங்களுக்கும் பரிசளிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



50 ஆண்டு காலமாக மக்கள் பணியில் அசத்தும் திருக்கோவிலூரின் மூன்றாம் தலைமுறையின் கொடைவள்ளல் தொழிலதிபர்

டாக்டர் T.K.T.முரளி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உட்பட்ட திருக்கோவிலூர் ஆன்மீக ரீதியாக புனித நகரமாக இருந்து வருகிறது. வடக்கே தென்பெண்ணையாறு, தெற்கே உலகளந்த பெருமாள் , கிழக்கே வீரத்தை போற்றும் வீரட்டேஸ்வரர் குடியிருக்கும் புனிதமான மண்ணில் பிறந்தவர் தான் நம் கட்டுரையின் கதாநாயகன் டாக்டர்.டி.கே.டி.முரளி.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்."

ஒரு தாய் தன் மகனைப் பெற்றெடுத்த போது அடைந்த மகிழ்ச்சியைவிட, அவன் மக்களுக்கான நற்பண்புகளையும், நற்பணிகளையும், உதவிகளையும் செய்து மக்கள் போற்றும் அளவிற்கு சிறந்த தலைவனாக விளங்கும் போது அந்தத் தாய் அடையும் மகிழ்ச்சியே மகத்தானது என்ற வள்ளுவன் குரலுக்கு ஏற்ப தமிழகத்தில் விழுப்புரம், கடலூர் என ஒருங்கிணைந்த தென்னார்க்காடு மாவட்டமாக இருந்தபோது திருக்கோவிலூர் எனும் புனிதமான நகரத்தில் பாரம்பரியமான பெரும் விவசாய குடும்பத்தில் தங்கவேல் உடையார் புஷ்பலதா தம்பதிகளுக்கு 4வது மகனாக 9-6-1962-ஆம் ஆண்டு அனைவராலும் டி.கே.டி. என்று செல்லமாக அழைக்கக்கூடிய டாக்டர்.டி.கே.டி.முரளி பிறந்தார். இவர் உடன் பிறந்தவர்கள் மொத்தம் 6பேர் அதில் மூன்று அக்கா, ஒரு தங்கை, ஒரு தம்பி என குடும்பத்தில் மொத்தம் 6பேர் கூட்டுக் குடும்பமாக இருந்து வந்தனர். வீரம் நிறைந்த பூமி என்று சொல்லும் திருக்கோவிலூரில் வீரத்திலகமிட்டு பிறந்தவர் தான் டாக்டர்.டி.கே.டி.முரளி என்னும் மாமனிதர்.

இவருடைய தந்தை தங்கவேல் உடையார் 1953 முதல் 1964 வரை அப்போதைய திருக்கோவிலூர் ஊராட்சியாக இருக்கும் காலகட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவராக 10 ஆண்டுகள் இருந்துள்ளார். அதன் பின்னர் 1962 முதல் 1964 வரை திருக்கோவிலூர் நகரத்தின் இந்திய தேசிய காங்கிரஸ்

சிறப்புப் பார்வை..

கட்சி சார்பில் சேர்மனாக இருந்துள்ளார். இந்த நிலையில் பாரம்பரிய விவசாய குடும்பத்திலும் பாரம்பரிய அரசியல் குடும்பத்திலும் 4வது மகனாகப் பிறந்த டாக்டர்.டி.கே.டி முரளி சிறு வயது முதலே துடிப்பான இளைஞராக கல்வியிலும், விளையாட்டிலும் திகழ்ந்து வந்தார். இவர் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை கடலூரில் உள்ள சென் மேரிஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியிலும், 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை கடலூர் செயின்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளியிலும், 10ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு சென்னை ராமகிருஷ்ணா மிஷனிலும் பள்ளிப் படிப்பை முடித்தார். பின்னர் 1983 முதல் 1986 வரை சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரியில் பி.ஏ., ஆங்கில இலக்கியம் பயின்று ஆங்கில புலமையில் சிறந்த முதல் மாணவனாக விளங்கினார். இவருக்கு கடந்த 1986 ஆம் ஆண்டு கௌரி என்பவருடன் திருப்பதியில் திருமணம் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது. இவருக்கு தருண்வேல் என்ற மகனும் ரிதுவர்ஷினி என்ற மகளும் உள்ளனர். இதில் தருண்வேல் பி.பி.ஏ., எம்.பி.ஏ., எல்.எல்.பி., முடித்துவிட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிறார். ரிதுவர்ஷினி சென்னையில் உள்ள தனியார் கல்லூரியில் பி.ஏ., ஆங்கில இலக்கியம் படித்து வருகிறார்.

இந்நிலையில் திருக்கோவிலூர் நகரத்தில் பாரம்பரிய விவசாய குடும்பத்தில் பிறந்த டாக்டர்.டி.கே.டி.முரளி சுமார் 50 ஆண்டு காலமாக தனது விவசாய நிலத்தில் நெல், வாழை, மணிலா, மரவள்ளி போன்ற விவசாய பயிர்களை இயற்கை உரங்களை மட்டுமே

பயன்படுத்தி விவசாயம் செய்து வருகிறார். இயற்கை விவசாயத்தை ஊக்குவித்த நம்மாழ்வார் போன்று திருக்கோவிலூர் நகரத்தின் விடிவெள்ளி டாக்டர்.டி.கே.டி.முரளி திருக்கோவிலூர் நகரத்தின் விவசாயத்தின் உற்ற நண்பனாகவும், இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நம்மாழ்வாரின் மறு உருவமாக இன்றும் விளங்கி வருகிறார். திருக்கோவிலூர் நகரத்தில் வீரத்திலகம்மிட்டு பிறந்த டாக்டர்.டி.கே.டி.முரளி மூன்றாம் தலைமுறையின் கொடை வள்ளலாக வாரி வழங்கும் கர்ணனை போல் தனது சொந்த உழைப்பில் பல பேருக்கு உதவி கரம் நீட்டி ஒளி விளக்காய் திகழ்ந்து வருகிறார். இவருக்கு திருக்கோவிலூர் ஐந்து முனை சந்திப்பு அருகில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் பெட்ரோல் பங்க் உள்ளது. திருக்கோவிலூர் மற்றும் 20 கிலோமீட்டர் சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்கு செல்லும் மினி பேருந்து வசதி கொண்ட பேருந்தும் உள்ளது.

மேலும் இவர் ஆதிசங்கரா பெனிபிட் ஃபண்ட் உடைய டைரக்டராகவும் இருந்து வருகிறார். இவருக்கு இளைஞர்களுக்கான உள் விளையாட்டு அரங்கம் உள்ளது. திருக்கோவிலூர் நகரத்தில் பெரும் தொழிலதிபராகவும் சமூக சேவகராகவும் ஏழை எளிய மக்களின் கொடை வள்ளலாகவும் இருந்து வந்த டாக்டர்.டி.கே.டி முரளி அவர்களுக்கு கடந்த 2001ஆம் ஆண்டு திமுக கூட்டணியில் புதிய நீதி கட்சி சார்பில் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தது. அப்போது புதிய நீதி கட்சியின் மாநில அமைப்பு செயலாளராக டாக்டர்.டி.கே.டி.முரளி இருந்து வந்தார். திருக்கோவிலூர், அரகண்டநல்லூர், மணலூர்பேட்டை, கண்டாச்சிபுரம், ரிஷிவந்தியம் திருவெண்ணெய்நல்லூர் உள்ளிட்ட நகரம் மற்றும் கிராமப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் நடைபெறுகின்ற கோயில் திருவிழாக்கள், கோயில்



குடமுழுக்கு உள்ளிட்ட கோயில்களுக்கு த் தேவையான பண உதவி, பொருள் உதவி, சாமி சிலைகள் அமைத்தல், கலசம், யாகசால பூஜை, பூ அலங்காரம் உள்ளிட்ட கோயில்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தந்து பொதுமக்கள் மற்றும் ஆன்மீக பக்தர்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்தார்.

ஊர் முக்கியஸ்தர்கள் உதவி என்று கேட்டால் முகம் சுளிக்காமல் சிரித்த முகத்தோடு ஓடோடி வந்து உதவி செய்வதில் கருணை உள்ள கொண்டவராக டாக்டர்.டி.கே.டி.முரளி விளங்கி வருகிறார். அது மட்டுமல்லாமல் பள்ளி படிக்கும் ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு நோட்டு பேனா மற்றும்





விளையாட்டு உபகரணங்கள் வழங்கி கல்வியிலும், விளையாட்டுகளிலும் சிறந்து விளங்க டாக்டர்.டி.கே.டி.முரளி ஊக்கப்படுத்தி வருகிறார். கல்லூரிகளில் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் உள்ளிட்ட கல்வியைப் படிக்க முடியாத ஏழை, எளிய மற்றும் தாய் தந்தையை இழந்த மாணவ மாணவிகளுக்கு அந்தந்த கல்லூரிகளுக்கு நேரில் சென்று கல்லூரியில் சேர்த்து கல்லூரி படிப்பை முடிக்கும் வரை கல்வி கட்டணத்தைச் செலுத்தி தாய் தந்தைக்கு நிகராக உதவி செய்து திருக்கோவிலூரில் நகரத்தில் மாமன்னனாக டாக்டர்.டி.கே.டி.முரளி விளங்கி வருகிறார்.

இதற்கு உதாரணமாக கூவாகம் கிராமத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் டாக்டர் படிக்க பண வசதி இல்லாமல் தவித்து வந்ததை அறிந்த இவர் இவருடைய சொந்த செலவில் அந்த மாணவனின் கல்வி செலவை முழுமையும் ஏற்று டாக்டருக்கு படிக்க வைத்து கல்விக்கண் திறந்த காமராஜராக சமூக சேவை செய்து வருகிறார். இதேபோல் ஏழை எளிய மக்கள் கல்லீரல் சம்பந்தமான அறுவை சிகிச்சை செய்து வரும் சென்னை ரிவர் ஃபவுண்டேஷனுக்கு டாக்டர்.டி.கே.டி.முரளி ரூபாய் 1லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார். இத்தகைய செயலுக்கு சொந்தக்காரரான டாக்டர்.டி.கே.டி.முரளி திருக்கோவிலூர் மற்றும் ரிஷிவந்தியம் ஆகிய தொகுதிகளில் மக்கள் போற்றும் பெரும் தலைவராக விளங்கி வருகிறார். அகமுடையார் சமுதாயத்தை சேர்ந்த டார்டர்.டி.கே.டி.முரளி, அகமுடையார் சமுதாய அமைப்பின் மாநில அளவில் ஆலோசகராக இருந்து வருகிறார். மேலும் மருது சேனா அமைப்பின் மூலம் ஆண்டுதோறும் நடத்தப்படும் மருது சகோதரர்கள் முப்பெரும் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மருது சகோதரர்கள் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு அன்னதானம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வாரி வழங்கி வருகிறார்.

அதேபோல் கோடை விடுமுறையில் திருக்கோவிலூர் நகரம் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் உள்ள விளையாட்டு வீரர்களின் வேண்டுகோளுக்கிணங்க கிரிக்கெட், கபடி, வாலிபால், டென்னிஸ், செஸ், கேரம் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தி முதல் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசு வழங்கி மாநில அளவில் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்று பிறந்த மண்ணுக்கும், தாய், தந்தைக்கும் பெருமைச் சேர்க்கும் விதமாக விளையாட்டு வீரர்களை மாநிலத்தில் முதலிடம் பிடிக்க டாக்டர்.டி.கே.டி.முரளி என்னும் மாமனிதர் ஊக்கப்படுத்தி வருகிறார். இதே போல் மதுரை மாவட்டம் ஆமூர் கிராமத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் இந்திய பாரம்பரிய நாய்களுக்கான கன்னி நாய் திருவிழாவில் சிறப்பு விருந்தினராக டாக்டர்.டி.கே.டி.முரளி கலந்து கொண்டு துவக்கி வைத்து சிறப்பித்து வருகிறார். அதுமட்டுமல்ல திருவெண்ணெய்நல்லூர் அருகே பெண்ணைவலம் கிராமத்தில்

கடந்த சில மாதங்களுக்கு முன்பு நடந்த கூத்தாண்டவர் கோயில் திருவிழாவில் பல்வேறு சினிமா நடிகர் மற்றும் நடிகைகளுடன் டாக்டர்.டி.கே.டி.முரளி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மிஸ் திருநங்கையாக முதலிடம் பிடித்தவருக்கு கிரீடம் மற்றும் ரோப்புடன் கூடிய ரூபாய் 15 ஆயிரம் முதல் பரிசினை வழங்கி கௌரவித்தார்.

இயற்கை விவசாயம், ஆன்மீகம், கல்வி, விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் இப்போது வரை துடிப்பான இளைஞனாக மக்கள் பணிகளில் சிறந்து விளங்கி வரும் திருக்கோவிலூர் நகரத்தின் விடிவெள்ளி டாக்டர்.டி.கே.டி.முரளி சேவைகளை பாராட்டி கடந்த 2016 ஜனவரி 24ஆம் நாள் டி.கே.டி.முரளி என்னும் முடி சூடா மன்னனுக்கு மேலும் ஒரு மணிமகுடமாக லண்டன் உலக செம்மொழி தமிழ் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

கொரோனா காலகட்டம் : கடந்த 2019 ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் கொரோனா என்னும் கொடிய நோயால் நோய் தொற்றால் ஏழை, எளிய பொதுமக்கள் அவதியுற்று வெளியில் வேலைக்கு செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கிய நிலையில் சிரமத்திற்கு உள்ளாகி வந்தனர். இதனை அறிந்த திருக்கோவிலூர் நகரத்தின் விடிவெள்ளி டாக்டர்.டி.கே.டி.முரளி திருக்கோவிலூர் நகரம் மற்றும் சுற்றுவட்டார கிராமப் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு அரிசி, காய்கறி, மளிகைப் பொருட்கள் மற்றும் முக கவசம், கிருமி நாசினி, கையுறை உள்ளிட்ட பொருட்களை வழங்கி கொரோனா நோய் தொற்றில் இருந்து பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு டாக்டர்.டி.கே.டி.முரளி தனது

சொந்த செலவில் டன் கணக்கில் அரிசி காய்கறி மற்றும் மளிகை பொருட்கள் இறக்குமதி செய்து அவரது திருக்காரங்களாலேயே ஏழை எளிய பொதுமக்களுக்கு வழங்கினார். அது மட்டுமல்லாமல் திருக்கோவிலூர் நகர மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள 600 குடும்பங்களைச் சேர்ந்த ஏழை எளிய மக்களுக்குத் தேவையான அரிசி, காய்கறி, மளிகைப் பொருட்கள் ஆகியவற்றை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை என டாக்டர்.டி.கே.டி.முரளி இரண்டு தடவை வழங்கி சமூகப் பணி செய்து வந்தார்.

இவருடைய பிறந்தநாளில் ஐந்து முனை சந்திப்பில் உள்ள இவரது பெட்ரோல் பங்கில் திருக்கோவிலூர் பேரூராட்சியாக இருந்த போதும், தற்போது நகராட்சி மாறிய போதும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி சிறப்பு செய்து வந்தார்.

இதேபோல் திருக்கோவிலூர், ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட கிராம பகுதிகளில் நடைபெறும் திருமணம், காதணி விழா, மஞ்சள் நீராட்டு விழா, பிறந்தநாள் விழா உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் கலந்து கொண்டு வாழ்த்தும் பெரியவராக இருந்து வருகிறார். அது மட்டுமில்லாமல் இறப்பு மற்றும் விபத்து ஆகிய துக்க நிகழ்ச்சிகளிலும் குடும்பத்தில் ஒருவராக கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதி உதவி செய்து அந்த குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி வருகிறார்.

தொடர்ந்து 50 ஆண்டு காலமாக மக்கள் பணியில் மூன்றாம் தலைமுறையாக பல தலைமுறைகளைத் தாண்டி பேசும் அளவிற்கு மக்கள் பணியும் மற்றும் சமூகப் பணியும் செய்து வரும் டாக்டர்.டி.கே.டி.முரளி திருக்கோவிலூர் பகுதியில் முடிசூடா மன்னனாக விளங்கி வருகிறார் என்பது சிறிதும் ஐயம் இல்லை. திருக்கோவிலூர் என்றால் அது டி.கே.டி.முரளி தான் என்று சிறு குழந்தைக் கூட அவர் வீட்டுக்கு வழி சொல்லும்!!! "இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்" என்ற பாடலுக்கு ஏற்ப இன்றும் "தனக்காக மட்டும் அல்ல, சமூகத்தின் நலனுக்காக வாழ்ந்தவர்.

நேர்மையை தனது அடையாளமாகவும், மனிதநேயத்தை தனது பாதையாகவும் கொண்டு பலரின் வாழ்க்கையில் நம்பிக்கையை விதைத்தவர். பதவி, பணம், புகழ் ஆகியவற்றை விட மக்களின் அன்பையே மிகப் பெரிய செல்வமாகக் கருதியவர்.

இவர் வாழ்ந்து வரும் வாழ்க்கை இன்று பலருக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்காக உள்ளது." பல தலைமுறைகளைத் தாண்டி பேசும் அளவிற்கு பல்வேறு சமூகப் பணிகளைச் செய்த டாக்டர்.டி.கே.டி.முரளிக்கு விஜிலென்ஸ் பத்திரிக்கை சார்பாக ஒரு ராயல் சல்யூட்.

நமது விஜிலென்ஸ்

அரசியல் மற்றும் புலனாய்வு மாத இதழ்

RNI No. TNTAM / 2012 / 46424 அஞ்சுவது யாதொன்றும் இல்லை ஆண்டவனைத் தவிர

INDIA'S FIRST ISO 9001 : 2015 CERTIFIED MAGAZINE

INDIA'S TRADE MARK CERTIFIED MAGAZINE

நமது 15 | விஜிலென்ஸ் 01 | ஆகஸ்ட்-2026 | விலை:ரூ.20/-

Namathu : 15|Vijilence:01 | August:2026 | Price:20/-

நிறுவனர்/வெளியீட்டாளர்/ஆசிரியர்

திரு.HE.AMB. சேவா ரத்னா விஜிலென்ஸ். DR.D. ஆனந்தன் துரைராஜ் M.A.,M.A.,Ph.D.,Dip.Agri.,HDSE.,HCC.,

இணை ஆசிரியர்கள்

திருமதி.HE.AMB. சேவா ரத்னா விஜிலென்ஸ். DR.பா.தமிழ் பாரதி ஆனந்தன் B.SC.,M.A.,M.Phil.,DTP.,PGDCA.,

விஜிலென்ஸ் DR.A. கிருஷ்ணன்

நிர்வாக ஆசிரியர் :

திருமதி.E. தமிழ் சுமதி இளங்கோவன்., சென்னை

செய்தி ஆசிரியர் : M.செளந்தர பாண்டியன்.,

உதவி ஆசிரியர்கள் :

M.சண்முக பாண்டியன், Dr.M.G. ஜானகிராமன், பாண்டிச்சேரி அக்பர் அலி, வடிவேல், ராஜாசிங், கராத்தே கார்த்தி

சிறப்பு ஆசிரியர்கள் :

E.திருவிக்ரம், நசீர், பெரியசாமி சிவக்குமார், சாகுல் குமார், ஊட்டி சிவகிருஷ்ணா, சுரேஷ்பாபு, கிளாஸ்டின், அப்துல் அஜீஸ். பிர்லா போஸ், எஸ் என் ஆர், செந்தில்குமார், நரேஷ் ஈஸ்வர், மகேந்திரன், அரவிந்த் மோதிலால் காதரே, பிரகாஷ் ராஜன்

கௌரவ ஆசிரியர்கள் :

கல்வித் தந்தை DR.S.ராமமூர்த்தி, D.தனபால் (Ex. உள்துறை அரசு துணைச் செயலாளர், தலைமைச் செயலகம்.) வேலன் (கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஓய்வு.) சேலம் R.R. பிரியாணி தமிழ்ச்செல்வன்

தலைமை நிருபர்கள் :

பூமாரி, அழகேசன், காமராஜ், ராஜா, Karnataka KGF Anbarasan, Manikandan, Kamala Kannan, கேரளா சசிகுமார், புதுதில்லி விவேகானந்தா, வேலுமணி, அடால்ஃப் எட்வின்,

நிருபர்கள் :

சௌந்தர், வினோத், வெங்கடேசன், ரகு, தினேஷ்குமார், சிவக்குமார், பாலமுருகன், ராஜா, சவுதி அரேபியா Paul Asriprince Philemon, அருண்குமார், மனோஜ், பாஸ்கர், கார்த்திகேயன், சுரேஷ், வசந்தகுமார், ஆனந்த், வெங்கடகிருஷ்ணன், மணிகண்டன், ஆரோக்கியம், பாலாஜி, மோகன், குமார், வினோத் குமார், முருகேசன், செல்வம், பழனிச்சாமி, முஜிபூர் ரஹமான், தமிழரசன்

ஒளிப்பட நிருபர் : சண்முக பாண்டியன், பாபு.

சட்ட ஆலோசகர்கள் :

திருச்சி M.சிவக்குமார்.,M.A.,B.L.,DCA.,DLL&AL., மதுரை கிளை உயர்நீதிமன்றம்
நாமக்கல் S.அன்பரசன்.,B.A.,B.L., சென்னை உயர்நீதிமன்றம்
G.ராதாகிருஷ்ணன்.,M.B.A.,B.L., மதுரை கிளை உயர் நீதிமன்றம்
DR.A.செல்வகுமார்.,MCA.,M.Sc.,(IT)B.L.,சென்னை உயர்நீதிமன்றம்
T.பிரபு அரசு.,B.Tech.,L.L.B.,சென்னை உயர்நீதிமன்றம்
K.அரவிந்தன்.,B.A.,B.L.,சென்னை உயர்நீதிமன்றம்

ஆசிரியரின் முகவரி : 78/25, பருசல் துறை ரோடு, முசிறி 621 211, திருச்சி மாவட்டம்.

நிர்வாக அலுவலகம் : 3/34A, சாரதி நகர் முதல் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை 600 056

கிளை அலுவலகங்கள் :

புதுதில்லி, பாண்டிச்சேரி, கர்நாடகா, கேரளா

Cell : 89734 15000

Email : namathuvijilence@gmail.com

Website : vijilencenetwork.com

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நமது விஜிலென்ஸ் நிர்வாகம் பொறுப்பல்ல. இதழில் வெளியாகும் செய்திகளின் உண்மைத் தன்மைக்கு அந்தந்த செய்தியாளர்களே பொறுப்பு.

இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.A.கிருஷ்ணன்

ஒரு அதிகாரி நினைத்தால் ஒரு மாவட்டத்தின் விதியை மாற்ற முடியும் என்பதற்கு



டாக்டர் R.ஸ்டாலின் IPS யே சாட்சி..

கால்நடை மருத்துவராகப் பணியைத் தொடங்கிய ஆர்.ஸ்டாலின் ஐபிஎஸ் கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்ற நாளிலிருந்து பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து மக்கள் இதயத்தில் நீங்கா இடம் பிடித்து உள்ளார் என்றால் அது மிகையல்ல.

தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள மாவட்டமான கன்னியாகுமரியில் ஸ்டாலின் மாவட்ட கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்ற பிறகு குறுகிய காலத்தில் மக்கள் நலனில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஸ்டாலின். இவர் 2020 ஆம் ஆண்டு ஐபிஎஸ் பிரிவில் தேர்வானவர். திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் உள்ளிட்ட மாவட்டங்களில் உதவி காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றினார். தற்போது கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பாளராக உள்ளார். பொதுமக்களுடன் நேரடி தொடர்பை ஏற்படுத்தும் வகையில் அவர் மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகளில் வில்லேஜ் மானிட்டரிங் திட்டம் குறிப்பிடத்தக்கது. இதன் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் பொறுப்பான ஒரு காவலர் நியமிக்கப்படுகிறார். மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்டுத் தீர்வு காண நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மாவட்டக் காவல் அலுவலகத்தில் பொது குறைதீர்ப்பு கேப்பு மையம் தொடங்கப்பட்டு இதுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டுள்ளன. பலருக்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக நிமீர் எனும் சிறப்பு பிரிவு செயல் படுகிறது. இதில் குழந்தை திருமணம் உள்ளிட்ட சட்டவிரோதங்களை தடுக்கும் விழிப்புணர்வு பணிகள் நடைபெறுகின்றன. இதன் மூலம் மூன்று குழந்தைத் திருமணங்கள் தடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. காவலர் விடுப்பு செயலியை அறிமுகம் செய்தார். மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கத்தில் இலவச எஸ்ஐ தேர்வு பயிற்சி மையமும் மாவட்டத்தில் தொடங்கப்பட்டு பலரும் பயின்று நன்மை பெறுகின்றனர் என்றால் அது மிகையே அல்ல. மேலும் வெற்றிப் பாதை மற்றும் மனம் திறந்து ஆகிய திட்டங்கள் மனநலம் மற்றும் மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்காகத் தொடங்கப்பட்டு உள்ளது.

பொதுமக்கள் மற்றும் காவல் துறை இடையேயான நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையில் ஸ்டாலின் எடுத்துள்ள நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றுள்ளன. விபத்தில்லா கன்னியாகுமரி மாவட்டத்தை உருவாக்குவதற்காக மாவட்ட காவல் துறையினர் பல்வேறு முயற்சி எடுத்து வருகின்றனர். குறிப்பாக விபத்தை ஏற்படுத்தும் அதிக விருட்சம் கொண்ட விளக்குகள் பொருத்தப்பட்ட வாகனங்களில் இருந்து வண்ண விளக்குகள் போன்றவற்றை பறிமுதல் செய்து வருகின்றனர். 18 வயதிற்கு உட்பட்டவர்கள் வாகனங்கள் இயக்கினால் அவர்களது பெற்றோர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கனரக வாகனங்கள் செல்வதற்கு நேர கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து விதி மீறல்கள் கண்டறியும் வகையில் ஏஐ கேமரா நாகர்கோவிலில் உள்ள குமரி மாவட்ட கலெக்டர் அலுவலக சிக்னலில் பொருத்தப்பட்டுள்ளது. காவல் ஏ ஐ என பேரிடப்பட்ட இந்த கேமரா மூலம் ஹெல்மெட் அணியாமல் செல்வது உள்ளிட்ட போக்குவரத்து விதி மீறல்களை ஏஐ தொழில்நுட்பம் மூலம் கண்டறிந்து தானியங்கி முறையில் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் வெற்றி பெற்றதை அடுத்து குமரி மாவட்டத்தில் மேலும் 10 இடங்களில் ஏ ஐ கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து ஸ்டாலின் ஐபிஎஸ் கூறியதாவது: அதிவேகம் மற்றும் தலைக்கவசம் அணியாமல் செல்லும் வாகனங்களை கண்டறிந்து அபராதம் விதிக்கும் வகையில் இந்த ஏ ஐ கேமரா வடிவமைக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு நாகர்கோவில்

கலெக்டர் அலுவலகம் சந்திப்பில் இந்த கேமரா பொருத்தப்பட்டது. அதன் மூலம் 4500 வழக்குகள் போடப்பட்டுள்ளன.

ஹெல்மெட் அணியும் பழக்கம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் குமரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் சுமார் 300 பேர் விபத்துகளில் பலியாகின்றனர். அதில் 70 சதவீதம் பேர் ஹெல்மெட் அணியாத காரணத்தால் மரணம் அடைந்துள்ளனர்.

இரண்டாம் கட்டமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் முக்கிய 10 இடங்களில் கேமரா பொருத்தப்பட்டுள்ளது. அபராதம் விதிப்பது எங்கள் நோக்கம் இல்லை. விபத்தில்லா கன்னியாகுமரி மாவட்டத்தை உருவாக்குவதற்காக காவல்துறையினர் முயற்சி எடுத்து வருகின்றனர். இதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

கனிம வளங்கள் கேரள மாநிலத்திற்கு கொண்டு செல்ல தமிழக அரசு தடை விதித்துள்ளது. இதற்காக எல்லையோர பகுதிகள் 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. கேரள மாநிலத்திற்கு கனிம வளங்கள் கொண்டு செல்ல முயன்றால் அவர்கள் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் லாரிகள் பறிமுதல் செய்யப்படும் என்று ஸ்டாலின் ஐபிஎஸ் தெரிவித்துள்ளார்.

ஆக மொத்தத்தில் மக்களின் பாதுகாப்பிற்கும், மாவட்ட கனிம வளங்களைப் பாதுகாக்கவும் இவர் எடுத்துள்ள நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் மிகப்பெரிய பாராட்டையும் அன்பையும் பெற்றுள்ளார்.

குமரி மாவட்ட மக்களின் நலனுக்காக 24 மணி நேரமும் உழைத்துக் கொண்டு இருக்கும் மாமனிதரை மக்களோடு சேர்ந்து நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ், விஜிலென்ஸ் டிவி விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனதார வாழ்த்துகிறோம் பாராட்டுகிறோம்.

இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.பா.தமிழ் பாரதி ஆனந்தன்

மூன்றாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நடைபெறும் மெடல் பரேட்–காவல்துறையில் புதிய உற்சாகம்.



தமிழக காவல்துறையில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் தங்களது அர்ப்பணிப்பு, தியாகம் மற்றும் வீரச் செயல்களுக்காக உரிய அங்கீகாரத்தையும் மரியாதையையும் எதிர்பார்த்து நீண்ட காலமாக காத்திருக்கின்றனர். சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்காக இரவு பகலின்றி உழைக்கும் காவலர்களின் பணிக்கு வழங்கப்படும் பாராட்டுகளும், பதக்கங்களும், ஊக்கத் திட்டங்களும் அவர்களது மனஉறுதியை உயர்த்தும் முக்கிய அம்சங்களாகும்.

கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மெடல் பரேட் (Medal Parade) நிகழ்ச்சி, தற்போது மீண்டும் நடைபெற்று உள்ளது என்பது காவல்துறையினர் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 2023 முதல் மூன்று ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த இந்த நிகழ்வு, மீண்டும் விழாக்கோலமாக அரங்கேறி இருப்பது காவல்துறைக்கு வழங்கப்படும் மரியாதையின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

காவல்துறையின் வீரதீர செயல்பாடுகளை கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் பதக்கங்கள் மற்றும் விருதுகள் வெறும் பாராட்டுகள் மட்டுமல்ல, அவை பணியாளர்களின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் அரசின் நன்றிக் குறியீடுகளாகும். அந்த வகையில், விருதுகள் மற்றும் பாராட்டு நிகழ்வுகள் காலதாமதமின்றி நடைபெறுவது காவலர்களின் மனநிலையிலும் பணித்திறனிலும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

சென்னை ஆர்.ஆர். ஸ்டேடியத்தில் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் மூலம் காவல்துறையினரின் பங்களிப்பு மீண்டும் பொதுமக்கள் முன் வெளிப்படுத்தப்படுவதுடன், சிறப்பாகப் பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் காவலர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

விருதுகளைப் பெற்றுள்ள அனைத்து அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.

தமிழக காவல்துறை தனது பாரம்பரிய பெருமையையும் தொழில்முறை திறமையையும் மேலும் உயர்த்தி, மக்கள் நலனுக்காகத் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.மாநிலத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் காவல்துறையினரின் நலனில் அரசு தொடர்ந்து அக்கறை செலுத்த வேண்டும்.

அவர்களது பணிச் சூழல், நலத்திட்டங்கள், ஊக்குவிப்புகள் மற்றும் அங்கீகாரங்கள் மேம்படுத்தப்படும் போது, அது காவல்துறையின் செயல்திறனை மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த சமூகத்தின் பாதுகாப்பையும் வலுப்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நடைபெற்ற மெடல் பிரேட் நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் முதல்வரின் திருகரங்களால் பதக்கங்கள் பெற்ற அனைத்து காவல் உயர் அதிகாரிகளுக்கும், காவல் அதிகாரிகளுக்கும் மற்றும் காவலர்களுக்கும் எங்களுடைய விஜிலென்ஸ் குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்கள்.

இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.பா.தமிழ் பாரதி ஆனந்தன்





காவிரி பிரச்சனை தீர்ப்பின் விவரங்கள் மக்கள் பார்வைக்கு..

தமிழகம் முழுவதும் மக்கள் மனங்களில் உண்மையைத் தெரிந்துக் கொள்ள ஆர்வமாக இருக்கிறார்கள் ஆம் காவிரி பிரச்சனையைப் பற்றி தெரிந்து கொள்வதில்.. கர்நாடகத்திற்கும் தமிழகத்திற்கும் இடையேயான காவிரி நீர் பங்கிட்டு பிரச்சனை சுதந்திரத்திற்கு முன்பே தொடங்கிவிட்டது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதாவது ஒரு தீர்வை நோக்கி நகர்ந்து இருக்கிறது. 1924 50 ஆண்டுகளுக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி தமிழ்நாட்டில் மேட்டூர் அணை கர்நாடகாவில் கிருஷ்ணராஜ சாகர் அணையும் உருவாக்கப்பட்டன. இந்த ஒப்பந்தம் காலாவதி ஆன பிறகு சட்டப் போராட்டங்கள் உருவெடுத்தன. அதன்படி மத்திய அரசு காவிரி தீர்ப்பாயத்தை அமைத்தது. அந்த தீர்ப்பாயம் மாநிலங்களுக்கு காவிரி நீரை எவ்வளவு பங்கிட்டு வழங்குவது என்று 2007 ஆம் ஆண்டு இறுதி தீர்ப்பை வழங்கியது. 2018 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இந்த பிரச்சனையில் இறுதி தீர்ப்பை வழங்கி விட்டது. ஆனாலும் காவிரி நதிநீரை பங்கிடுவதில் உள்ள சிக்கல் மட்டும் இன்னும் தீரவில்லை.

காவிரி பிரச்சனை என்பது வெறும் சட்ட பிரச்சனை மட்டுமல்ல. அது மழைப்பொழிவு அணைகளில் உள்ள நீர் இருப்பு விவசாயத் தேவைகள் மாநிலங்களில் நடைபெறும் அரசியல் மக்கள் உணர்வுகள் ஆகியவற்றோடும் தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது. இதை சமயோசிதமாக அதே நேரம் மக்கள் பயன்பெறும் வகையில் மக்கள் உணர்வுகள் ஆகியவற்றோடும் தொடர்புடையதாகவும் உள்ளது. எனவே இதை அரசியல் சுயநலம் இன்றி அணுகினால் மட்டுமே நிரந்தர தீர்வு கிட்டும் என்ற இலக்கை அடைய முடியும். சமீப காலமாக காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதில் கர்நாடகா அரசு தீவிரம் கட்டி வருகிறது. அதே நேரம் அதைத் தடுப்பதில் தமிழக அரசு தீவிரமாக உள்ளது. இதில் இப்போது புதிய சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பது உச்சநீதிமன்றம் தீர்ப்பின் அடிப்படையில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் தான்.

காவிரியின் கடைமடை மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, புதுவை ஆகிய மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல் மேகதாதுவில் அணைகட்ட ஒரு செங்கலைக் கூட எடுத்து வைத்து விட முடியாது என்று பல ஆண்டுகளாகவே தமிழகத்தில் இருக்கும் அரசியல் கட்சிகள் ஆணித்தரமாக அடித்து சொல்லி வருகின்றன.

இந்த நிலையில்தான் பாராளுமன்றத்தில் இது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த மத்திய மந்திரி ராஜ்பூஷன், சவுத்ரி காவிரி நீர் தொடர்பான பிரச்சனை குறித்து சுப்ரீம் கோர்ட் கடந்த 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ஆம் தேதி வழங்கிய தீர்ப்பின்படி காவிரி ஆற்றின் குறுக்கே எந்த வகையான கட்டமைப்பையும் அமைப்பதற்கு கர்நாடக மாநிலம் தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று எங்கும் குறிப்பிடவில்லை. தமிழகத்தின் அனுமதி தேவை இல்லை என்று சுட்டிக்காட்டி உள்ளார். அப்படியானால் இத்தனை ஆண்டு காலமாக தமிழர்களின் ஒப்புதல் இல்லாமல் கர்நாடகா அணை கட்ட முடியாது அதை உச்சநீதிமன்றமும் தெளிவுபடுத்தி விட்டது என்று சொன்னார்களே அது என்னவாயிற்று என்பதுதான் சட்டம் தெரியாத எதார்த்தத்தை மட்டுமே தெரிந்து கொள்ளும் சாமானியனின் மில்லியன் கேள்வி. அதே நேரம் காவிரி நீர்பாயத்தின் விதி எண் 13 ஐ சுட்டிக்காட்டி தமிழகத்தின் ஒப்புதல் இல்லாமல் கர்நாடகா மேகதாதுவில் அணைகட்ட முடியாது என்ற கடந்த 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் தகவல் தெரிவித்ததாக கூறுகிறார்கள்.

விதி பதிமூன்றா அல்லது பதினெட்டா எது தமிழகத்தின் விவசாயிகளின் தலைவிதி சம்பந்தப்பட்டது. இப்போது உண்மைதான் என்ன? உச்சநீதிமன்றம் தீர்ப்பும் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பும் என்னதான் சொல்லி இருக்கிறது என்பது துல்லியமாக மக்களுக்குத் தெரிய வேண்டும். மிகப்பெரிய சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். இத்தனை ஆண்டுகளாக ஒரு தீர்ப்பை கூட தெளிவுபடுத்த முடியாமல் போய்விட்டதே என்ற ஆதங்கம் தான் மக்கள் மனங்களில் இப்போது எழுந்துள்ளது. இதற்கு முந்தைய அரசுகள் இந்த விவகாரத்தில் எடுத்த நடவடிக்கைகளை இப்போது இன்னொரு கோணத்தில் அனேக முயற்சிக்கிறார் தமிழகம் முதல்வர். எது எப்படி என்றாலும் தீர்ப்பு தெளிவானால் மட்டுமே மக்கள் தெளிவும் மகிழ்ச்சியும் அடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கள்ளக்குறிச்சி வெங்கடேசன்



திருக்கோவிலூர் பெரிய ஏரியை சீரமைத்து, படகு குழாம் வசதியுடன், நடைபாதையுடன் கூடிய பூங்கா அமைக்க வேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை..

திருக்கோவிலூர் பெரிய ஏரி, 95 ஏக்கர் பரப்பளவு கொண்டது. 800 ஏக்கர் விவசாய நிலங்கள் இதன் மூலம் பாசன வசதி பெறுகிறது. இந்த ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீர் மூலம் கச்சிக்குச்சான், ஆவிகொளப்பாக்கம், காட்டுப்பையூர் உட்பட 7க்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பி 3,000 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

தென்பெண்ணையில் சிறிதளவு தண்ணீர் வந்தால் கூட ஆற்று வாய்க்கால் வழியாக ஏரிக்கு தண்ணீர் வந்து, ஏரி எப்போதும் நிரம்பி கடல் போல் காட்சி அளிக்கும். முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஏரிக்கான ஆற்று வாய்க்கால் முடியனூர் தென்பெண்ணை ஆற்றில் இருந்து துவங்கி ஏழு கிலோ மீட்டர் வரை பயணிக்கிறது.

பெஞ்சல் புயல் வெள்ளத்தில் ஆற்று வாய்க்காலின் தடுப்புச் சுவர் உடைந்து, மணல் நிரம்பி வாய்க்கால் தூர்ந்து போனது.

இதனை சமீபத்தில் ஜே.சி.பி., மூலம் அகற்றினர். என்றாலும் ஆற்றில் தண்ணீர் வந்தால் ஏரிக்கு முழுதுமாக வராது. காரணம், ஏரி வாய்க்காலுக்கு தண்ணீர் செல்லும் வகையில் ஆற்றில் இருந்த தடுப்பு சுவர் உடைந்து விட்டது.

இதனைச் சீரமைத்து முழு கொள்ளளவு தண்ணீரும் ஏரிக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது விவசாயிகளின் முக்கியமான கோரிக்கையாக உள்ளது. இது ஒரு புறம் இருக்க, திருக்கோவிலூர் நகரின் அருகாமையில் இருக்கும் ஏரியில் நீர் நிரம்பினால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, கடுமையான வறட்சி காலங்களில் கூட நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஏரியின் தற்போதைய நிலை கவலை அளிக்கும் வகையில் உள்ளது. ஏரியைச் சுற்றி மீன் கடைகள், மாடு வதைக்கும் கூடங்கள், கருவேல மரங்களுடன் புதர் மண்டி கிடக்கிறது.

சந்தப்பேட்டையின் கழிவு நீர் முழுதும் ஏரியில் கலக்கிறது. இதனால் ஏரி மாசடைந்து விவசாயத்திற்கு பயனற்று விடுமோ என்ற பயம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. இந்நிலையில் உள்ளூர் மக்கள் மட்டுமின்றி திருக்கோவிலூர் உலகளந்த பெருமாள், வீரட்டானேஸ்வரர் கோவில், ரகோத்தமர் மூல பிருந்தாவனம், ஞானானந்தர் தபோவனம் என கோவில்களுக்கு வரும் பக்தர்கள் இளைப்பாறுவதற்கும், பொழுது போக்குவதற்கும் வசதி இல்லை.

இக்குறையைப் போக்க ஏரியை தூர்வாரி கரைகளைப் பலப்படுத்தி, திருக்கோவிலூர் சந்தப்பேட்டை இடையே உள்ள சாலையின் இருபுறமும் நடைபாதை அமைத்து, படகு குழாம் அமைத்து, ஆண்டு முழுதும் நீர் நிறைந்திருக்கும் வகையில், ஆற்று வாய்க்காலைப் புதுப்பிப்பதன் மூலம் ஏரியில் எந்த காலத்திலும் நீர் நிரம்பி சுற்றுலாப் பயணிகளையும், பக்தர்களையும், நகர வாசிகளையும் மகிழ்விக்கும் ஒரு பொழுதுபோக்கு பூங்காவாக உருவாக்க முடியும்.

இதன் மூலம் ஏரி மாசடைவது தடுக்கப்படும் விவசாயத்திற்கும் தடையின்றி தண்ணீர் கிடைக்கும். அரசுக்கும் வருவாய் கிடைக்கும். இக்கோரிக்கையை அனைத்து தரப்பினரும் பல ஆண்டுகளாக முன்வைத்து வருகின்றனர்.

சட்டசபை தேர்தலில் போட்டியிட்ட அனைத்து கட்சிகளுமே மக்களின் இந்தக் கருத்திற்கு செவி சாய்க்கும் வகையில் வாக்குறுதிகளை அளித்து இருந்தனர். எனவே திருக்கோவிலூர் பெரிய ஏரியைச் சீரமைத்து ஆண்டு முழுதும் தண்ணீர் நிரம்பி இருக்க ஏதுவாக ஆற்று வாய்க்காலையும் புனரமைத்து பொழுதுபோக்கு பூங்காவாக உருவாக்க பொதுப்பணித்துறை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே ஒட்டுமொத்த நகர வாசிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

அன்று போராட்டம் இன்று அமைச்சர் பதவி இழப்பு..



இந்தியாவில் மாணவர்கள் எத்தனையோ போராட்டங்களை நடத்தி இருக்கின்றனர். ஆனால் டெல்லியில் நடந்த கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் பின்னணியில் இளைஞர்களும் மாணவர்களும் நடத்திய போராட்டம் நாட்டிலேயே முதல் முறையாக மத்திய மந்திரியை பதவி இழக்க வைத்துவிட்டது.

1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாட்டில் உள்ள அரியலூர் ரயில் விபத்தில் 150 க்கும் அதிகமான பயணிகள் உயிரிழந்ததை தொடர்ந்து அப்போது ரயில்வே மந்திரியாக இருந்த லால் பகதூர் சாஸ்திரி தார்மீக பொறுப்பு ஏற்று பதவியை ராஜினாமா செய்தார். அது போல் பல்வேறு காரணங்களுக்காக பல மத்திய மந்திரிகள் பதவியை இழந்து இருக்கிறார்கள்.

மாணவர்களின் போராட்டத்தின் எதிரொலியாக சமீப காலங்களில் யாரும் ராஜினாமா செய்தது இல்லை. இந்த நிலையில் மாணவர் இளைஞர்களின் போராட்டத்தின் விளைவால் ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் போராட்டக்காரர்களுடன் எவ்வளவோ பேச்சுவார்த்தை நடத்தியும் சற்றும் பயனளிக்காததால் வேறு வழி இல்லாமல் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்தார்.

இதே தர்மேந்திர பிரதானின் வாழ்க்கை வரலாற்றை சற்று பின்னோக்கி பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். அவருடைய அரசியல் பயணமே அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் என்று சொல்லப்படும் பா.ஜனதாவின் மாணவர் அமைப்பில் இருந்து தான் தொடங்கியது. அந்த அமைப்பு சார்பில் அவர் 1996 ஆம் ஆண்டு பிளஸ் 2 தேர்வு வினாத்தாள் கசிவை எதிர்த்து ஒடிசாவில் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தினார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பின்னணியில் பா. ஜனதா சார்பில் பல்லஹாரா சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஒடிசாவில் பா. ஜனதா யுவ மோர்ச்சா என்ற இளைஞர் அமைப்பின் தலைவர் ஆனார். தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு பா. ஜனதா தேசிய செயலாளராக உயர்த்த அவர் பா. ஜனதா யுவ மோர்ச்சா தேசிய தலைவராக உயர்ந்தார். பின்பு பா. ஜனதாவில் தீவிர பங்காற்றிய அவர் 2014 பீகார் நாடாளுமன்றத் தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அப்போது 40 இடங்களில் 31 இடத்தில் வெற்றி கனிகளை பறித்துக் கொடுத்தார்.

2014 ஆம் ஆண்டு முதல் பிரதமர் மோடியின் மந்திரி சபையில் மந்திரியாக பல்வேறு முக்கிய பொறுப்புகளில் இருந்து வந்தார்.

இப்போது கல்வி மந்திரிகாக இருந்த தர்மேந்திர பிரதான் அன்று இதே போல் ஒரு வினாத்தாள் கசிவுக்காக மிகப்பெரிய போராட்டத்தை ஒடிசாவில் நடத்தியவர்.

இன்று அதே வினாத்தாள் கசிவு விவகாரத்தில் தன்னுடைய பதவியையே இழந்துள்ளார். அவர் ராஜினாமா செய்த உடன் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி தன்னுடைய சமூக வலைதளத்தில் ஜனநாயகம் வென்றது. மகாத்மா காந்தி, அம்பேத்கார் வென்றார்கள் என்று பதிவிட்டு நாடு முழுவதும் வெற்றியைக் கொண்டாடியது. பா. ஜனதாவை எதிர்ப்பவர்கள் யாரும் இல்லை என்று ஒட்டுமொத்த இந்தியாவும் நினைத்திருந்த நேரத்தில் மாணவர் இளைஞர்கள் பட்டாளம் இதோ நாங்கள் இருக்கிறோம் என்று அடையாளம் காட்டி இருக்கிறார்கள்.

டெல்லி மட்டுமல்ல நாடு முழுவதும் அவர்களுடைய போராட்டம் தீயாக பரவியதால் தங்களுக்கு எதிராக மிகப்பெரிய சக்தியை உருவெடுத்து விடுவார்களோ என்ற அச்சத்தில் மந்திரி சபையில் இருந்து தர்மேந்திர பிரதானை பா. ஜனதா கழற்றி விட்டுள்ளது. அவர் ராஜினாமா செய்ய நினைத்திருந்தால் வினாத்தாள் கசிவு விவகாரம் வெளியே வந்ததும் அதற்கான முடிவை எடுத்திருப்பார். போராட்ட அலை ஓயாமல் சுனாமியாக சுழன்று அடித்ததால் அதன் வீரியத்தை தாங்க முடியாமல் பா. ஜனதா அவரை ராஜினாமா செய்ய வைத்து விட்டது.



சட்ட ஆலோசகர் பிரபு அரசு

காவல்துறையின் கண்ணியத்தை உயர்த்திய ஜி.ஹரிகுமார் ADC



அர்ப்பணிப்பு, ஒழுக்கம், தலைமைத்துவம் – பாராட்டைப் பெற்ற காவல் அதிகாரி :

ஒரு நாட்டின் அமைதியும், சமூகத்தின் பாதுகாப்பும், சட்டம்ஒழுங்கை நிலைநாட்டும் காவல்துறையின் அர்ப்பணிப்பு மிக்க பணியில் தான் நிலைத்திருக்கிறது. அந்த வகையில், தனது கடமையை நேர்மையுடனும், பொறுப்புணர்வுடனும் மேற்கொண்டு, தமிழ்நாடு காவல்துறையின் பெருமையை உயர்த்தி வரும் அதிகாரிகளில் குறிப்பிடத்தக்கவர் கூடுதல் துணை காவல் ஆணையர் (Additional Deputy Commissioner of Police) ஜி. ஹரிகுமார்.

காவல்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு அதிகாரிக்கும் மக்கள் பாதுகாப்பு, சட்டம்ஒழுங்கு பராமரிப்பு மற்றும் சமூக அமைதியை உறுதி செய்வது மிகப்பெரிய பொறுப்பாகும். இந்தப் பொறுப்பைத் தனது சேவையின் இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஜி. ஹரிகுமார், தனது சிறந்த நிர்வாகத் திறன், உடனடி முடிவெடுக்கும் ஆற்றல் மற்றும் மனிதநேய அணுகுமுறையால் அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

காவல்துறை என்பது குற்றங்களைத் தடுக்கும் அமைப்பாக மட்டுமல்ல, மக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கும் அமைப்பாகவும் விளங்குகிறது. இதனை உணர்ந்து, பொதுமக்களுடன் நல்லுறவை வளர்ப்பதிலும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதிலும், அமைதியான சூழலை உருவாக்குவதிலும் அவர் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தேர்தலில் சிறப்பான பங்களிப்பு : 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 அன்று நடைபெற்ற மெட்ராஸ் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்க (MHAA) தேர்தல், தமிழக சட்டத்துறையின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாகும். ஆயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் பங்கேற்ற இந்தத் தேர்தல் பாதுகாப்பாகவும், அமைதியாகவும் நடைபெறுவதற்கான அனைத்து காவல் ஏற்பாடுகளையும் ஜி. ஹரிகுமார் தலைமையில் காவல்துறை சிறப்பாக மேற்கொண்டது.

தேர்தல் வளாக பாதுகாப்பு, கூட்ட நெரிசல் கட்டுப்பாடு, போக்குவரத்து ஒழுங்குமுறை, சட்டம்ஒழுங்கு கண்காணிப்பு மற்றும் தேர்தல் நடவடிக்கைகள் இடையூறு இன்றி நடைபெற ஒருங்கிணைப்பு ஆகிய அனைத்திலும் அவரது திறமையான செயல்பாடு வெளிப்பட்டது. அதன் விளைவாகத் தேர்தல் முழுமையாக அமைதியான சூழலில் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

பாராட்டு சான்றிதழ் – கடமைக்குக் கிடைத்த அங்கீகாரம் : அவரது சிறப்பான சேவையைப் பாராட்டி, மெட்ராஸ் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் "Certificate of Appreciation" வழங்கி கௌரவிக்கப்பட்டது. தேர்தல் குழுவின் தலைவர், முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் வி. பாரதிதாசன் தலைமையில் இந்த விருது வழங்கப்பட்டது.

இந்த அங்கீகாரம் ஒரு அதிகாரியின் தனிப்பட்ட சாதனையை மட்டுமல்ல, தமிழ்நாடு காவல்துறையின் தொழில்முறைத் திறன், ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்பிற்குக் கிடைத்த உயரிய மரியாதையாகவும் அமைந்துள்ளது.

தலைமைத்துவத்தின் அடையாளம் : ஒரு சிறந்த காவல் அதிகாரி என்பது உத்தரவுகளை வழங்குபவர் மட்டுமல்ல, தனது குழுவினரை ஊக்குவித்து, ஒற்றுமையுடன் செயல்பட வழிநடத்துபவரும் ஆவார். அந்த வகையில் ஜி. ஹரிகுமார் தனது பணியில் ஒழுக்கம், நேர்மை, பொறுப்புணர்வு மற்றும் மனிதநேயத்தை முன்னிறுத்தி செயல்பட்டு வருகிறார். அவரின் தலைமைத்துவம் சக அதிகாரிகளுக்கும், இளம் காவல் அலுவலர்களுக்கும் ஊக்கமளிக்கும் எடுத்துக்காட்டாக உள்ளது.

சமூக நம்பிக்கையை வென்ற அதிகாரி : காவல்துறையின் மீது மக்களின் நம்பிக்கையை அதிகரிப்பதே ஒரு காவல் அதிகாரியின் மிகப்பெரிய வெற்றியாகும். பொதுமக்களின் பாதுகாப்பை முதன்மையாகக் கொண்டு செயல்படும் ஜி. ஹரிகுமார் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதோடு, அமைதியான சமூகத்தை உருவாக்கும் பணியிலும் முக்கிய பங்காற்றி வருகிறார்.நிறைவாக கடமை, கண்ணியம், ஒழுக்கம், நேர்மை ஆகிய நான்கு உயரிய பண்புகளைத் தனது பணியில் கடைப்பிடித்து வரும் கூடுதல் துணை காவல் ஆணையர் ஜி. ஹரிகுமார் தமிழ்நாடு காவல்துறையின் பெருமைக்குரிய அதிகாரிகளில் ஒருவராக திகழ்கிறார். மெட்ராஸ் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் வழங்கிய பாராட்டு சான்றிதழ், அவரது சேவைக்கு கிடைத்த அங்கீகாரமாக மட்டுமல்லாமல், எதிர்காலத்திலும் சிறப்பான சேவையைத் தொடரும் ஊக்கமாகவும் அமைந்துள்ளது. "கடமைக்கு அர்ப்பணிப்பு, சேவைக்கு மரியாதை, மக்களின் நம்பிக்கையே காவல் அதிகாரியின் உண்மையான விருது" – இந்த உயரிய கொள்கையைத் தனது பணியின் மூலம் நிரூபித்து வரும் ஜி. ஹரிகுமாருக்கு எங்களது மனமார்ந்த பாராட்டுகளும் நல்வாழ்த்துகளும்.

சென்னை வினோத்குமார்

இருளில் இருந்து வெளிச்சத்தில்....



நெய்க்குப்பி மக்களின் 15 ஆண்டுக் கனவை நனவாக்கிய MLA விஜயராஜ்..

ஒரு மக்கள் பிரதிநிதியின் வெற்றி என்பது தேர்தலில் பெற்ற வாக்குகளால் மட்டுமே அளவிடப்படுவதில்லை. மக்களின் நீண்டகால பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலமே அவரது செயல்திறன் மதிப்பிடப்படுகிறது. அந்த வகையில், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் பா. விஜயராஜ், தனது அரசியல் பயணத்தின் தொடக்கத்திலேயே மக்கள் மனதில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூரில் பிறந்த விஜயராஜ், சாதாரண குடும்பப் பின்னணியில் இருந்து கல்வி மற்றும் உழைப்பின் மூலம் உயர்ந்தவர். பள்ளிக் கல்வியை மன்னிவாக்கம் மற்றும் ஊரப்பாக்கம் பகுதிகளில் முடித்த அவர், திண்டிவனம் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளங்கலை வரலாறு பயின்று, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் 2012ஆம் 2015 கல்வியாண்டின் முதல் மாணவராக தங்கப்பதக்கம் பெற்றார். பின்னர் எஸ்ஆர்எம் பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பை முடித்து, 2018 முதல் வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிறார்.

பொதுமக்களின் பிரச்சினைகளைச் சட்ட ரீதியாக அணுகிய அனுபவம், அவரை அரசியல் களத்திற்கும் அழைத்துச் சென்றது. 2024 ஆம் ஆண்டு தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த அவர், கட்சிப் பணிகளில் தீவிரமாகச் செயல்பட்டு தலைமைக்குப் பெரும் நம்பிக்கைக்குரியவராக உயர்ந்தார். அதன் விளைவாக திருப்போரூர் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு பெற்று, சுமார் 39 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வானார்.

பொறுப்பேற்ற உடனேயே மக்கள் சந்திப்புகளைத் தொடங்கிய விஜயராஜிடம், பல்வேறு கோரிக்கைகள் குவிந்தன. அவற்றில் மிகவும் வேதனையளித்த கோரிக்கை ஒன்று செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் ஒன்றியத்திற்குட்பட்ட நெய்க்குப்பி கிராம மக்களிடமிருந்து வந்தது.

15 ஆண்டுகளுக்கும் மேலாக அந்தப் பகுதியில் வசித்து வந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மின் இணைப்பு இல்லாமல் வாழ்ந்து வந்தனர். மாலை நேரம் வந்தாலே இருள் சூழ்ந்த வீடுகள், குழந்தைகளின் கல்விக்கு இடையூறு, பெண்கள் மற்றும் முதியோரின் பாதுகாப்பு சிக்கல்கள் என எண்ணற்ற பிரச்சினைகள் அங்கு நிலவின. பல ஆண்டுகளாக அதிகாரிகளின் கதவுகளைத் தட்டியும், மனுக்கள் அளித்தும் தீர்வு கிடைக்காத நிலையில், புதிய நம்பிக்கையுடன் மக்கள் தங்கள் கோரிக்கையை விலிகி விஜயராஜிடம் முன்வைத்தனர்.

மக்களின் கோரிக்கையை சாதாரண மனுவாகப் பார்க்காமல், வாழ்க்கைத் தரத்தை மாற்றும் அடிப்படை தேவையாகக் கருதிய விஜயராஜ், வருவாய்த்துறை, மின்சாரத்துறை மற்றும் மாவட்ட நிர்வாக அதிகாரிகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தினார். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் வீரப்பன், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களின் ஒத்துழைப்புடன் பல

ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த நடைமுறைகள் விரைவுபடுத்தப்பட்டன.

அதன் விளைவாக, நெய்க்குப்பி கிராமத்தின் நீண்டகால காத்திருப்புக்கு முடிவு கிடைத்தது.

மின் இணைப்பு வழங்கும் விழாவில் முதற்கட்டமாக 90 பயனாளிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. பல ஆண்டுகளாக இருளில் இருந்த வீடுகள் ஒளியால் நிரம்பிய தருணம், அங்கு கூடியிருந்த மக்களின் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீரை வரவழைத்தது. வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வீடுகள், ஒரு கிராமத்தின் புதிய விடியலை அறிவித்தன.

"15 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நாளுக்காக காத்திருந்தோம். இன்று எங்கள் வீடுகளில் விளக்குகள் எரிகின்றன. எங்கள் குழந்தைகள் இனி வெளிச்சத்தில் படிக்கப் போகிறார்கள்," என்று நெய்க்குப்பி கிராம மக்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வின் போது, அரசுப் பள்ளியில் பயிலும் ஆறாம் வகுப்பு மாணவி ஒருவர், "எங்கள் கிராமத்திற்கு மின் இணைப்பு கிடைக்கச் செய்த விலிகி விஜயராஜ் அண்ணனுக்கும், அமைச்சர் சரத் அண்ணனுக்கும், தமிழக முதல்வர் விஜய் மாமாவுக்கும் நன்றி," என்று கூறிய தருணம் நிகழ்ச்சியின் உணர்வுப்பூர்வமான தருணமாக அமைந்தது.

விழாவில் உரையாற்றிய விஜயராஜ், "மக்கள் என்னிடம் வைத்த நம்பிக்கையே இந்த வெற்றியின் காரணம். தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது என் கடமை. நெய்க்குப்பி மக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றியதில் மகிழ்ச்சி அடைகிறேன். தொடர்ந்து மக்களின் தேவைகளுக்காகப் பாடுபடுவேன்," என்று உறுதியளித்தார்.

ஒரு தங்கப்பதக்கம் வென்ற மாணவர், ஒரு வெற்றிகரமான வழக்கறிஞர், இன்று மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் மக்கள் பிரதிநிதி. பா. விஜயராஜின் இந்த செயல்பாடு, அரசியல் என்பது வெறும் பதவி அல்ல, அது மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் பொறுப்பு என்பதை மீண்டும் ஒருமுறை உணர்த்துகிறது.

நெய்க்குப்பி கிராமத்தில் ஒளிரும் மின் விளக்குகள், வெறும் மின்சாரத்தின் அடையாளம் மட்டுமல்ல, மக்கள் வைத்த நம்பிக்கைக்குக் கிடைத்த வெற்றியின் அடையாளமும் ஆகும். நெய்க்குப்பி கிராம மக்களின் மனதில் இடம் பிடித்தார் பா. விஜயராஜன் என்றால் அது மிகையே அல்ல. விலிகி பா. விஜயராஜனின் மக்கள் சேவைப் பணிகள் மென்மேலும் சிறக்க நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ், விஜிலென்ஸ் டிவி, விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்கள்.









இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.A.கிருஷ்ணன்

விக்ரம் I ராக்கெட உலகிற்கு சவால் விடும் இந்தியா..

விண்ணில் சீறிப்பாய்ந்த விக்ரம் 1 ராக்கெட் வெற்றிகரமாக சுற்றுப்பாதையை அடைந்தது என்றதும் உலகில் பல நாடுகளுக்கு இந்தியாவைப் பார்த்து தலை சுற்றாத குறைதான். ஏனெனில் ராக்கெட் வேகத்தில் இந்தியா எல்லா துறைகளிலும் வளர்வது தான். ஹைட்ரஜன் ரயிலை இயக்க சில நாட்களுக்கு முன்பு தான் ஜெர்மனி, இத்தாலி, சீனா, அமெரிக்கா போன்ற பின்னணி நாடுகள் பட்டியலில் இணைந்தது.

விண்வெளி ஆராய்ச்சியைப் பொருத்தமட்டில் இந்தியாவில் அரசு நிறுவனமான ஐ.எஸ்.ஆர்.ஓ இருக்கிறது. நிலவின் தென் பகுதியில் சந்திராயனை இறக்கி சாதித்து இருக்கிறது. அதே நேரம் தனியார் நிறுவனங்களை உருவாக்கி ராக்கெட் டுகளை உருவாக்கும் திறன் கொண்டவை தான் என்பது நிரூபிக்கப்பட்டு உள்ளது. ஆனால் தான் பிரதமர் நரேந்திர மோடி நேரடியாகவே தொலைபேசியில் விஞ்ஞானிகளுடன் உரையாடி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

கடந்த 2020ல் மேற்கொள்ளப்பட்ட இந்திய விண்வெளி துறையின் சீர்திருத்தங்கள் தான் இந்த முன்னேற்றத்திற்கு காரணம். தற்போது ஏவப்பட்ட விக்ரம் 1 ராக்கெட் சிறிய சேர்க்கை கோள்களை குறைந்த செலவில் விண்ணில் செலுத்தும் உலகளாவிய சந்தையில் இந்தியாவுக்கு புதிய வாய்ப்புகளை நிச்சயம் உருவாக்கிக் கொடுக்கும். அரசு மற்றும் தனியார் கூட்டான்மையால் விண்வெளி துறையில் இந்தியா புதிய யுகத்தில் நுழைந்து இருப்பதாகவே பல நாடுகளும் பார்க்கின்றன. தனியார் விண்வெளி நிறுவனங்களின் முன்னோடி நாடாக இருப்பது அமெரிக்கா எலன்மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் என்பது உலகின் மிகவும் வெற்றிகரமான தனியார் விண்வெளி நிறுவனம் ஆகும். 18 ஆண்டுகளுக்கு முன்பே நமது இன்றைய சாதனையை அந்த நிறுவனம் சாதித்து இருக்கிறது. அதற்காக நாம் பின்தங்கி இருப்பதாக நினைக்க வேண்டியதில்லை. ஏனெனில் இந்தியா வளரும் நாடாகவே இருக்கிறது. முழு வளர்ச்சி அடைந்த நாடாக இன்னும் மாறவில்லை.

ஸ்டார் லிங்க் ஆயிரக்கணக்கான செயற்கை கோள்கள் மூலம் உலகம் முழுவதும் அதிவேக இணையதள சேவையை வழங்கி வருகிறது. மனிதர்களின் விண்வெளி பயணம் முதல் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்புவது வரையிலான வளர்ச்சியை அமெரிக்கா தனியார் விண்வெளி நிறுவனங்கள் அடைந்து விட்டன. இப்போதுதான் இந்தியாவும் தனியார் நிறுவனம் மூலம் முழுமையான ராக்கெட்டை வடிவமைத்து விண்ணில் செலுத்த முடியும் என்பதை நிரூபித்துள்ளது. உலகின் முன்னணி தனியார் நிறுவனங்களின் உயரத்தை நமது நிறுவனங்கள் இன்னும் எட்டாமல் இருக்கலாம் ஆனால் தனியார் விண்வெளி நிறுவனங்களுக்கு இது மிகப்பெரிய தொடக்கப் புள்ளியாக இருக்கும்.

தனியார் நிறுவனங்களுக்கான புதிய அத்தியாயம் தொடங்கி உள்ளது. இந்த ஸ்கை ரூட் எரோஸ் பேஸ் நிறுவனத்தைப் போல இந்தியாவில் செயல்படும் நிறுவனங்களும் வளர்ச்சி அடைந்தால் அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியா உலகின் முக்கிய வணிக ராக்கெட் ஏவுதல் மையங்களில் ஒன்றாக மாறும் என்று விஞ்ஞானிகள் கணித்துள்ளார்கள். அந்த நிலையை எட்டும் போது அந்நிய செலவாணி வருவாய் அதிகரிக்கும். இளைஞர்களுக்கு விண்வெளி தொழில்நுட்பத்தால் புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகளும் உருவாகும்.

வானை அளப்போம் (விண்வெளியில் உள்ள கோள்களையும், வானின் ரகசியங்களையும் அறிவியல் மூலம் ஆராய்ந்து அறிவோம்.)

கடல் மீனை அளப்போம் (கடலில் உள்ள வளங்களையும், உயிரினங்களின் இயல்புகளையும் முழுமையாகப் புரிந்து கொள்வோம்.)சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம் (நிலவு மற்றும் சந்திர மண்டலத்தைப் பற்றிய உண்மைகளைக் கண்டறிந்து தெளிவு பெறுவோம்.)

வானை அளப்போம் கடல் மீனை அளப்போம் சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்..

என்ற பாரதியின் கனவுகளுக்கு வடிவம் கொடுத்து வருவது இந்தியாவில் நிகழ்த்தப்பட்டு வரும் சாதனைகள் மூலம் தெளிவாகி இருக்கிறது. உலகின் குருவாக மட்டுமல்ல நம்பர் ஒன் நாடாக உருவாகி வருகிறோம் என்பது தான் நிதர்சனமான உண்மை. விரைவில் இந்தியா நம்பர் ஒன் நாடாக மாறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

வாழ்க பாரதம்.. வளர்க பாரதம்..
வந்தே மாதரம்.. ஜெய்ஹிந்த்..



முசிறி நகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்குத் தமிழக அரசின் சிறப்பு நலத்திட்ட முகாம்..

முசிறி நகராட்சி வளாகத்தில் நகராட்சிப் பகுதிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கான சிறப்பு அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட முகாம்கள் நடைபெற்றது. முசிறி நகராட்சித் தலைவர் கலைச்செல்வி சிவக்குமார் தலைமை வகித்து குத்து விளக்கு ஏற்றி வைத்து முகாமைத் தொடங்கி வைத்தார். நகராட்சி ஆணையர் பிரபு, பொறியாளர் சம்பத்குமார் மற்றும் நகர அமைப்பு ஆய்வாளர் திவ்யதர்ஷினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். துப்பரவு ஆய்வாளர் பன்னீர்செல்வம் வரவேற்றார். இந்நிகழ்வில் திமுக நகரச் செயலாளர் சிவக்குமார் கலந்து கொண்டார்.

கழிவு நீர்த் தொட்டி பணியாளர்கள் மற்றும் கழிவு சேமிப்புத் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு உரிமைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. தகுதியான தூய்மைப் பணியாளர்களுக்கு உடனே நலவாரிய அட்டைகள் வழங்கப்பட்டன. வட்ட வழங்கல் துறை, தாட்கோ, தொழிலாளர் நலத்துறை, மருத்துவத்துறை, கல்வித்துறை மற்றும் சமூக நலத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளில் அரங்குகள் அமைக்கப்பட்டு மனுக்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

இம் முகாமில் திருச்சி இருங்கலூர் கிருஷ்ணா மருத்துவக் கல்லூரி (கிருஷ்ணா யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை) சார்பில் மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற்றது. இம் முகாமில் ரத்த கொதிப்பு (BP), ரத்த சர்க்கரை (சுகர்), பொது மருத்துவம், மூட்டு வலி, கை வலி, கால் வலி, நரம்பு பிரச்சனை, மசாஜ், கவுன்சிலிங், யோகா, அக்குபஞ்சர் என யோகா மற்றும் இயற்கை முறையில் மருத்துவம் பார்க்கப்பட்டது. 90 க்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்களும், அவர்களின் குடும்பத்தினரும் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயன் பெற்றனர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இம் முகாமில் கிருஷ்ணா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் மருத்துவரும் பேராசிரியருமான சுஜித் மற்றும் பிரியதர்ஷினி, பயிற்சி மருத்துவர்களான அரவிந்த் மற்றும் சௌமியா, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கிருஷ்ணன், ரஜித், சுமன், துகில், பாலமுருகன், சீமா, நிஷா, நிஷாந்தினி மற்றும் ஷாலினி ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இம்முகாம்கான ஏற்பாடுகளை நகராட்சி நிர்வாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு : கிருஷ்ணா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை சார்பாக நடைபெற்ற யோகா மற்றும் இயற்கை மருத்துவ விழிப்புணர்வு முகாமில் பயன் பெற்ற துப்புரவு பணியாளர்கள் பலர் பயனடைந்துள்ளனர் என்று அவர்களே நம்மிடம் தெரிவித்தனர். அதோடு மட்டுமல்லாமல் இதுபோன்று முகாம்கள் அடிக்கடி எங்களுக்காக முசிறியில் நடைபெற்றால் எங்களுக்கு சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்றும் துப்புரவு பணியாளர்கள் எங்களிடம் தெரிவித்தனர்கள் என்பதும் மிகவும் குறிப்பிடத்தக்கது.







கடலூர் சுரேஷ்குமார்

காவிரி, மேகதாது அணை பிரச்சனைகளுக்கு தமிழக முதலமைச்சரின் முடிவு என்ன?

ஒரு பக்கம் மேகதாது அணை கட்டும் பிரச்சனை. மறுபக்கம் தமிழகத் தாய் வாழ்த்து பாடலை ஆளுநர் மூன்றாவது இடத்திற்கு தள்ளிய விவகாரம் என்று தலையை பிடித்துக் கொள்ளும் இரண்டு மிகப்பெரிய உரிமைப் போராட்டத்தின் மத்தியில் தமிழ்நாடு வந்து நிற்கிறது. இந்த இரண்டு விவகாரமும் தமிழ்நாட்டின் உணர்வுடன் கலந்தது. புதிதாக அமைந்திருக்கும் தமிழக வெற்றிக் கழக அரசுக்கும் தமிழக முதல்வருக்கும் இது பெரும் சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது.

காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்ட தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் ஒப்புதலை பெற வேண்டும் என உச்சநீதிமன்றம் கூறவில்லை. ஒன்றிய ஜல் சக்தித் துறை இணை அமைச்சர் ஸ்ரீ ராஜ் பூஷன் சவுத்ரி நாடாளுமன்றத்தில் தெரிவித்து இருக்கிறார். காவிரி பிரச்சனைத் தொடர்பாக உச்ச நீதிமன்றம் கடந்த 2018 ல் அளித்த தீர்ப்பில் காவிரியின் குறுக்கே எந்தவிதமான கட்டுமானத்தையும் கர்நாடகா கட்டுவதற்கு தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் ஒப்புதலை பெற வேண்டும் என கூறியுள்ளது. ஒன்றிய அரசுக்கு தெரியுமா? இதற்கு கர்நாடகா ஒப்புதல் பெற்றுள்ளதா என்ற பாமக தலைவர் அன்புமணி எம். பி கேள்விக்கு இந்த பதில் கிடைத்திருக்கிறது.

இந்த ஆண்டு காவிரியில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீரை இன்று வரை கர்நாடகா திறந்து விட்டதால் டெல்டா பகுதியில் பயிர்கள் கருகி வரும் சூழலில் கொதித்துப் போய் இருக்கும் விவசாயிகளுக்கு பேரிடியாக இந்த அறிவிப்பை ஒன்றிய அரசு நாடாளுமன்றத்திலேயே தெரிவித்து இருக்கிறது. ஒன்றிய அரசின் இந்தப் பதிலால் தமிழ்நாட்டு விவசாயிகள் திகைத்துப் போய் நிற்கிறார்கள். கர்நாடகாவிற்கு ஆதரவாக மோடி அரசு ஊரவஞ் சனை செய்து இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலையிட வேண்டும் என்று கடிதம் மட்டுமே எழுதி இருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

நாடாளுமன்றத்தில் மேகதாது விவகாரத்தில் ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரின் பதில் ஏமாற்றம் அளிக்கிறது. அந்தப் பதிலை திரும்பப் பெற வேண்டும். மேகதாது அணை கட்டுவது தொடர்பாக கர்நாடகாவுக்கு எந்தவிதமான அனுமதியும் வழங்கக்கூடாது. காவிரியில் பாசனம் பெறும் பிற மாநிலங்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். கடைமடை மாநில அனுமதி இல்லாமல் மேலே உள்ள மாநிலங்கள் அணை கட்ட முடியாது.

காவிரி மன்ற இறுதி தீர்ப்பு 2018 உச்ச நீதிமன்ற தீர்ப்புப்படி கர்நாடகா அணை கட்ட முடியாது. எனவே கூட்டாட்சித் தத்துவம் நீதிமன்ற தீர்ப்புகளைக் காக்க பிரதமர் மோடி உடனே தலையிட வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் தமிழக முதலமைச்சர்.

மேகதாது அணை போன்ற இரு மாநில அரசுகள் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் அனைத்து கட்சி கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

அனைத்து தரப்பு ஆலோசனையைப் பெற வேண்டும். அதன் அடிப்படையில் தமிழ்நாட்டின் ஒருமித்த உணர்வு அடிப்படையில் அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையான நடவடிக்கை கூட இங்கு எடுக்கப்படவில்லை என கடிதம் மட்டுமே எழுதப்பட்டு இருக்கிறது.

இன்னொரு பக்கம் தமிழ்த் தாய் வாழ்த்து பாடலை உலகிற்கு தந்த மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் வந்தே மாதரம், தேசிய கீதத்திற்கு பின்னர் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாக பாடப்பட்டது. பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழ்த்தாய் வாழ்த்து தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான விஷயம். இந்த விஷயத்திலும் மேகதாது அணை விவகாரத்திலும் தமிழக முதலமைச்சர் என்ன முடிவு எடுக்க போகிறார்? என்பதை தமிழ்நாடே எதிர்பார்த்து காத்திருக்கிறது.

ஆசிரியர்

பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான ஐபிஎஸ் அதிகாரி தற்கொலை முயற்சி..





பெண் அதிகாரியின் பாலியல் தொல்லையால் ஐபிஎஸ் அதிகாரி ஒருவர் தற்கொலைக்கு முயற்சி செய்தார். மேலும் அந்தப் பெண் அதிகாரி பணி நேரத்தில் தன்னை உல்லாசத்திற்கு அழைக்கிறார் என்று பரபரப்பு கடிதம் எழுதியுள்ளார்.

யுபிஎஸ்சி மத்திய அரசு பணியாளர் தேர்வாணைத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று ஐபிஎஸ் தகுதி பெறுபவர்களுக்கு தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் உள்ள தேசிய காவல் அகாடமியில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் ஆந்திர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் உதய கிருஷ்ணா ரெட்டி ஐபிஎஸ் பயிற்சி பெற்று வருகிறார். இதே அகாடமியில் கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த பெண் ஐபிஎஸ் அதிகாரி ஒருவரும் ஐபிஎஸ் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்நிலையில் அந்தப் பயிற்சி பெண் அதிகாரி ஆந்திராவைச் சேர்ந்த பயிற்சி அதிகாரி உதய கிருஷ்ணா மீது ஹைதராபாத் காவல் நிலையத்தில் ஒரு புகார் அளித்தார். அதில் அகாடமியில் என்னுடன் பயிற்சி பெற்று வரும் ஐபிஎஸ் அதிகாரியான உதய கிருஷ்ணா என்னிடம் பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்து வருகிறார். மொபைல் போனில் ஆபாச தகவல்களையும், படங்களையும் அனுப்பி வந்ததோடு கடந்த 9 மாதங்களாக என்னை மிரட்டியும் வந்தார். மற்றவர்கள் மத்தியில் என் கண்ணியத்தைக் குறைக்கும் வகையில் அவதூறாகப் பேசுகிறார். மேலும் என்னை வலுக்கட்டாயமாக தனது அறைக்கு இழுத்துச் சென்று எனது முடியைப் பிடித்து கழுத்தை நெறித்து கொல்ல முயன்றார். மேலும் கத்தியை எனது கழுத்தில் வைத்து அறையை விட்டு வெளியேற விடாமல் தடுத்தார். மறுநாள் மீண்டும் என் மீது தாக்குதல் நடத்தினார். எனது அனுமதி இன்றி ஒரு தனிப்பட்ட வீடியோவைப் பதிவுச் செய்து என்னை மிரட்டுவதற்காக எனது கணவருக்கு அனுப்பினார் என்று புகாரில் தெரிவித்திருந்தார். இப் புகாரைத் தொடர்ந்து உதய கிருஷ்ணா மீது வழக்குப்பதிவு செய்து போலீசார் அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தினார். குற்றச் செயல்களை தடுக்கும் காவல்துறையினருக்கு உத்தரவிடும் உயர் பொறுப்பில் அமரும் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் மையத்தில் நடந்துள்ள இந்தச் சம்பவம் ஹைதராபாத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இதற்கு இடையில் மன உளைச்சல் அடைந்த உதய கிருஷ்ணா விஷயம் குடித்து தற்கொலைக்கு முயன்றார். சிகிச்சைப் பெற்று வரும் அவர் விஷம் குடிப்பதற்கு முன்பு இரண்டு பக்க கடிதம் எழுதியுள்ளார். அதில் பெண் அதிகாரி என் மீது அளித்துள்ள புகாரை நான் முற்றிலும் மறுக்கிறேன். அவர் என்னுடன் 2025 ல் இருந்து உறவில் இருக்கிறார். தற்போது வேறு பயிற்சி அதிகாரிகள் தூண்டி விட்ட காரணமாகவே என் மீது அவர் புகார் அளித்துள்ளார். சம்பவத்தன்று அவர் வலுக்கட்டாயமாக எனது அறைக்குள் நுழைந்தார். தற்போது அவருக்குத் திருமணம் ஆகி விட்டது. அதன் பிறகும் என்னுடன் ஆன உறவை செக்ஸ் ரீதியாகவும், உணர்வு பூர்வமாகவும் தொடர வற்புறுத்தினார். அப்போது என்னை வலுக்கட்டாயமாக எனது அனுமதியின்றி கட்டிப்பிடித்து முத்தமிட்டார்.

பணி நேரத்தில் உல்லாசமாக இருக்கலாம் வா என்று அழைத்து வற்புறுத்துகிறார். அதற்கு நான் மறுத்தேன் இதனால் என்னுடன் சண்டை இட்டார். எனவே இச்சம்பவம் குறித்த வீடியோவை எனது செல்போனில் எனது பாதுகாப்புக்காக எடுத்து வைத்தேன். அவரது கணவருக்கு அந்த வீடியோவை அனுப்பி வைத்தேன். ஏனென்றால் இவர் அடிக்கடி எனது அறைக்கு வந்து எனக்கு செக்ஸ் கொடுத்து வந்தார். இப் பிரச்சனைக்கு முடிவு கட்டுவதற்காகவே அந்த வீடியோவை நான் அனுப்பினேன் என கடிதத்தில் கூறியுள்ளார். செக்ஸ் குற்றச்சாட்டின் அடிப்படையில் தற்கொலைக்கு முயன்றுள்ள உதய கிருஷ்ணா ஆந்திர பிரதேச காவல்துறையில் போலீஸ் காரராக பணியாற்றினார். கடந்த 2019 ஆம் ஆண்டில் தனது பணியை ராஜினாமா செய்துவிட்டு யுபிஎஸ்சி தேர்வுக்கு படிக்கத் தொடங்கினார். தனது கடின உழைப்பிற்கு பின் 2024 ஆம் ஆண்டில் யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்று ஐபிஎஸ் அதிகாரி ஆனார். ஒரு சாதாரண போலீஸ்காரராக இருந்து யுபிஎஸ்சி அதிகாரியாக உயர்ந்த இவரது சாதனை பத்திரிகைகளில் வெளியாகி பலரால் பாராட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆந்திர பிரதேச முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு இவரை நேரடியாக அழைத்து வாழ்த்து தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

பயிற்சி ஐபிஎஸ் அதிகாரி உதய கிருஷ்ணா ரெட்டியை இடைநீக்கம் செய்து மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது. இதுகுறித்து முன்னாள் ஐபிஎஸ் அதிகாரியான நாகேஸ்வர ராவ் தன் எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது : உதய கிருஷ்ணா ரெட்டிக்கு நீதி கிடைக்க வேண்டும். பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். அவரை இடைநீக்கம் செய்தது பல கேள்விகளை எழுப்புகிறது. பரஸ்பர சம்மதத்துடன் ஒரு உறவில் இருந்தால் இருவர் மீதும் சமமான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒருவர் மீது மட்டும் நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்காது என கூறியுள்ளார்.

சேலம் செந்தில்குமார்

முன்னாள் இராணுவ வீரர் வீட்டில் கூட்டுக்கொள்ளை வழக்கில் முக்கிய எதிரி மீது குண்டர் தடுப்புக் காவல் சட்டம் அமல்..





கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கே.ஏ.நகர் தர்கா பகுதியில் வசித்து வரும் முன்னாள் இராணுவ வீரர் நாகசாமி (53) என்பவரது வீட்டிற்குள் கடந்த 12.06.2026 அன்று பட்டப்பகலில் புகுந்த கும்பல், வீட்டிலிருந்த பெண்களை மிரட்டி ரொக்கப் பணம், தங்க நகைகள் மற்றும் மதிப்புமிக்க பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றது. இச்சம்பவம் தொடர்பாக கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதாவின் உத்தரவின்பேரில், கிருஷ்ணகிரி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் கி.ஜி. ராமச்சந்திரன் மேற்பார்வையில், கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் ஆய்வாளர் மணிமாறன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

தொழில்நுட்ப ஆதாரங்கள், அறிவியல் புலனாய்வு மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணையில் இர்ஷாத் @ முகமது இர்ஷாத் (20), அம்ஷாத் (23), அர்பாஸ் (29), பாசில் @ சையத் பாசில் (27), அன்னு @ நூர் முகமது (28) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து, இவ்வழக்கின் முக்கிய எதிரியான சேது @ அசால்ட் சேது என்பவரும் கைது செய்யப்பட்டார்.

எதிரிகளிடம் நடத்தப்பட்ட விசாரணை மற்றும் தகவலின் அடிப்படையில், சேது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ.70,500 ரொக்கப் பணம், சுமார் 7லு பவுன் தங்க நகைகள் மற்றும் ஒரு வெள்ளிக் காப்பு ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. பின்னர், கைது செய்யப்பட்ட அனைத்து எதிரிகளும் நீதிமன்ற உத்தரவின்படி சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

விசாரணையில், சேது @ அசால்ட் சேது மீது கிருஷ்ணகிரி நகரம், கிருஷ்ணகிரி தாலுக்கா, குருபரப்பள்ளி, பர்கூர், ஷிமிறிசிளிஜி, தர்மபுரி மாவட்டம் ஏரியூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி காவல் நிலையங்களில் திருட்டு, அடிதடி, தாக்குதல், கலவரம், கொலை மிரட்டல், கொலை முயற்சி மற்றும் போதைப்பொருள் (NDPS) தொடர்பான 10க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பது விசாரணையில் தெரியவந்தது.

மேலும், 2023 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டம் ஏரியூர் காவல் நிலைய கொலை முயற்சி வழக்கில், இவர் மீது ஏற்கனவே குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலையத்தில் சேது @ அசால்ட் சேது மீது ரவுடி வரலாற்றுத் தாள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், கடத்த 12.01.2026 அன்று சேது (எ) அசால்ட் சேதுவை கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் (ஸிஞிளி) முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது விசாரணையின் முடிவில் ஙிழிஷிஷி பிரிவு 129ன் கீழ் ஓராண்டு காலத்திற்கு சேது நன்னடத்தைப் பிணைப்பத்திரம் வழங்கியிருந்தார்.

முக்கிய குற்றவாளி சேது நன்னடத்தைப் பிணைப்பத்திரம் வழங்கிய பின்னரும் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்ததால், கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா மற்றும் கிருஷ்ணகிரி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் கி.ஜி. ராமச்சந்திரன் ஆகியோரின் பரிந்துரையின் பேரில், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரும் மாவட்ட நிர்வாக நடுவருமான திரு. தினேஷ்குமார், மிகிஷி அவர்கள், தமிழ்நாடு ஆபத்தான செயல்களில் ஈடுபடுவோர் தடுப்புக் காவல் சட்டம், 1982 (தமிழ்நாடு சட்டம் 14/1982) பிரிவு 3(1) ன் கீழ் நாள் 29.07.2026 என்ற ஆணையின் மூலம் சேது @ அசால்ட் சேது என்பவரை குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிட்டார்.


அதனைத் தொடர்ந்து, மேற்கண்ட தடுப்புக் காவல் ஆணை 29.07.2026 அன்று சேலம் மத்திய சிறையில் நீதிமன்றக் காவலில் இருந்த சேது @ அசால்ட் சேதுவுக்கு கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் ஆய்வாளர் திரு. மணிமாறன் அவர்களால் நேரில் சார்வு செய்தார்.

காவல்துறையின் எச்சரிக்கை..

பொதுமக்களின் உயிர், உடமை மற்றும் பொது அமைதிக்கு அச்சுறுத்தலாகச் செயல்படும் நபர்கள் மீது குண்டர் தடுப்புக் காவல் சட்டம் உள்ளிட்ட சட்டரீதியான கடுமையான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். குற்றச் செயல்களை முற்றிலும் கட்டுப்படுத்தி, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் கிருஷ்ணகிரி மாவட்ட காவல்துறை உறுதியுடன் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது..

குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாநில அரசிடமிருந்து இழப்பீடு பெறும் உரிமை –Victim Compensation Scheme

சட்ட ஆலோசகர் செல்வகுமார்



ஒரு குற்றச் செயலால் பாதிக்கப்பட்ட நபருக்கு ஏற்பட்ட உடல், மன மற்றும் பொருளாதார இழப்பை முழுமையாக ஈடு செய்ய இயலாத சூழல்கள் பல நேரங்களில் ஏற்படுகின்றன.

குறிப்பாக, குற்றவாளியிடம் இழப்பீடு வழங்கும் பொருளாதார வசதி இல்லாதபோது அல்லது குற்றவாளி தப்பிச் சென்றிருக்கும் நிலையில், பாதிக்கப்பட்டவர் அல்லது அவரது குடும்பத்தினர் எந்தவித நிவாரணமும் இல்லாமல் விடப்படக் கூடாது என்பதே சட்டத்தின் நோக்கமாகும்.

இதற்காகவே Victim Compensation Scheme (பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டு திட்டம்) உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம், தகுதியுடைய பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது அவர்கள் உயிரிழந்தால் அவர்களின் சார்ந்திருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு, மாநில அரசின் Victim Compensation Fund-இலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டம் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS), 2023ன் விதிகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாநில அரசும் தனது Victim Compensation Scheme-ஐ அறிவித்து, அதன்படி இழப்பீடு வழங்குகிறது.

யார் இழப்பீடு பெறலாம்?

குற்றச் செயலால் நேரடியாக பாதிக்கப்பட்ட நபர் அல்லது அவர் உயிரிழந்தால், அவரைச் சார்ந்திருக்கும் குடும்ப உறுப்பினர்கள், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் இழப்பீடு கோரலாம்.

எந்த சூழ்நிலைகளில் இழப்பீடு கிடைக்கும்?

குற்றவாளியிடமிருந்து இழப்பீடு பெற முடியாதபோது, அல்லது அவர் வழங்கும் இழப்பீடு பாதிக்கப்பட்டவரின் இழப்பிற்கு போதுமானதாக இல்லாதபோது, மாநில அரசின் Victim Compensation Fundஇலிருந்து இழப்பீடு வழங்கப்படலாம்.

மேலும், குற்றவாளி தப்பியோடியிருந்தாலும் அல்லது கண்டுபிடிக்கப்படாத நிலையிலும், சட்டத்தில் உள்ள தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டால் பாதிக்கப்பட்டவர் அல்லது அவரது குடும்பத்தினர் இத்திட்டத்தின் பயனைப் பெறலாம்.

எடுத்துக்காட்டுகள்

ஒரு நபர் தாக்குதலுக்கு உள்ளாகி கடுமையான காயமடைந்து பல மாதங்கள் வேலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகக் கருதுங்கள். மருத்துவச் செலவு பல லட்சம் ரூபாயாக இருந்தாலும், குற்றவாளியிடம் இழப்பீடு வழங்கும் வசதி இல்லாத நிலையில், பாதிக்கப்பட்டவர் மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தை (DLSA) அணுகி Victim Compensation Scheme-ன் கீழ் அரசின் நிதியிலிருந்து இழப்பீடு பெறலாம்.

அதேபோல், ஒரு குடும்பத்தின் ஒரே வருமானம் ஈட்டும் நபர் கொலை செய்யப்பட்டால், அவரைச் சார்ந்திருக்கும் குடும்ப உறுப்பினர்கள் DLSAயிடம் விண்ணப்பித்து, குடும்பத்தின் பொருளாதார நிலை மற்றும் வருமான இழப்பு ஆகியவை பரிசீலிக்கப்பட்ட பிறகு மாநில அரசின் Victim Compensation Fundஇலிருந்து இழப்பீடு பெறலாம்.

இழப்பீடு பெறும் நடைமுறை

இழப்பீடு பெறுவதற்கான முதல் படி, குற்றம் தொடர்பாக காவல் நிலையத்தில் FIR பதிவு செய்வதாகும். அதன் பின்னர் மருத்துவச் சான்றுகள், மருத்துவச் செலவு ரசீதுகள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை சேகரிக்க வேண்டும்.

பின்னர், மாவட்ட சட்டப் பணிகள் ஆணையம் (DLSA) அல்லது மாநில சட்டப் பணிகள் ஆணையம் (SLSA)க்கு விண்ணப்பிக்கலாம். சில வழக்குகளில், விசாரணை நடத்தும் நீதிமன்றமும் DLSAக்கு பரிந்துரை செய்யலாம்.

DLSA, பாதிப்பின் தன்மை, மருத்துவச் செலவு, பொருளாதார இழப்பு மற்றும் பிற தொடர்புடைய சூழ்நிலைகளை ஆய்வு செய்து, மாநில அரசின் திட்டத்தின் அடிப்படையில் இழப்பீடு வழங்க பரிந்துரை செய்யும்.

தேவையான ஆவணங்கள்

பொதுவாக பின்வரும் ஆவணங்கள் தேவைப்படும்:

திமிஸி நகல்

அடையாள ஆவணம் (ஆதார் அல்லது பிற அரசு வழங்கிய அடையாள அட்டை)

* மருத்துவமனை பதிவுகள் மற்றும் மருத்துவச் சான்றிதழ்கள்

மருத்துவச் செலவு ரசீதுகள்

மரணம் ஏற்பட்டிருந்தால் மரணச் சான்றிதழ்

தேவையானால் சட்டப்பூர்வ வாரிசுச் சான்றிதழ்

வங்கி கணக்கு விவரங்கள்

குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி என்பது குற்றவாளிக்கு தண்டனை வழங்குவதால் மட்டும் நிறைவடைவதில்லை.

பாதிக்கப்பட்டவர் அல்லது அவரது குடும்பத்தினர் மீண்டும் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்புவதற்குத் தேவையான நிதி ஆதரவை வழங்குவதும் நீதியின் ஒரு முக்கிய அங்கமாகும்

அதனால், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் குடும்பத்தினர், குற்றவாளியிடமிருந்து இழப்பீடு பெற முடியாத சூழலில், மாநில அரசின் Victim Compensation Schemeன் கீழ் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ உரிமையை அறிந்து, மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தை (DLSA) அணுகி உரிய இழப்பீட்டை கோரலாம்.

அஞ்சுவது யாதொன்றும் இல்லை ஆண்டவனைத் தவிர என்ற தாரக மந்திரத்தோடு 15 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் எங்களுடைய நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ்..

இணை ஆசிரியரின் நன்றி மடல்..

நாம் ஒவ்வொருவரும் இந்த சமூகத்தில் விவசாயி, ஆசிரியர், மருத்துவர்,பொறியாளர், விஞ்ஞானி,காவலர், வழக்கறிஞர், நடிகர், கணிப்பொறியாளர், விமானவியலாளர், எலக்ட்ரீசியன், பிளம்பர் தச்சர், கட்டடவியலாளர், அரசியல்வாதி என ஒவ்வொரு விதமான பொறுப்பில் இருந்து நம்முடைய வாழ்க்கையை அன்றாடம் நடத்திச் செல்கின்றோம். அதில் எங்களைப் போன்றகள் ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று அழைக்கப்படும் பத்திரிக்கை துறையிலும் சாதித்து வருகிறார்கள் என்றால் அது மிகையல்ல.. அப்படிப்பட்ட ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படும் பத்திரிகை துறையில் நாங்களும் இருக்கிறோம் என்பதில் மிகவும் பெருமிதம் கொள்கிறோம். ஆம் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி அன்று நாங்கள் நமது விஜிலென்ஸ்அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் என்ற பத்திரிக்கையை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி வருகிறோம் என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

எங்களுடைய உயிர் மூச்சான நமது விஜிலென்ஸ்அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் ஆகஸ்ட் 15ஆம் தேதி பதிநான்கு ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்து 15 -ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. இதற்கு முழுமையான காரணமான எங்களுடைய நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழின் நிறுவனர் / வெளியீட்டாளர் / ஆசிரியர், அம்பாசிடர் சேவா ரத்னா, தங்க மகன், சேவை செம்மல், சேவை இமயம், செந்தமிழ்ச்செல்வன், சாதனைத் தமிழன், வித்தகன், நவீன பத்திரிகை உலகின் தந்தை என பல பட்டங்களுக்குச் சொந்தக்காரர் என்னுடைய அன்பான கணவர் என் அருமை அத்தான் விஜிலென்ஸ்டாக்டர் ஆனந்தன் துரைராஜ் அவர்களே என்றால் அது மிகை அல்ல.. அதோடு மட்டுமல்லாமல் எங்கள் விஜிலென்ஸ்குடும்பத்தின் அதாவது நமது விஜிலென்ஸ்அரசியல் மற்றும் புலனாய்வு இதழ், விஜிலென்ஸ்டிவி, விஜிலென்ஸ்மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ்கல்வி அறக்கட்டளையின் முதல் அச்சாணியும் இவரே ஆவார்..



உயர்ந்த கொள்கையையும், சமுதாய நோக்கமும், மனித நலனில் மிகுந்த நாட்டமும், நாட்டு முன்னேற்றத்தில் மிகுந்த ஈடுபாடும், மற்றவர்களிடமிருந்து மாறுபட்ட சிந்தனை போக்கும், புதியன படைக்கும் வேட்கையும், படைப்பு ஆற்றலும், பத்திரிக்கையில் பணியாற்றும் அனைவரையும் ஒருங்கிணைத்து செயல்படும் திறமை மிக்கவராகவும், பொறுப்புணர்வுடனும், மக்கள் நல நாட்டம் உள்ளவராகவும், மனித நேயம் மிக்கவராகவும், மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விஷயங்களை உடனே தீர்மானிக்கும் கூர்மையான அறிவு படைத்தவராகவும், தனக்கு கீழ் பணி புரியும் ஏனையோரிடம் சுமூகமான உறவு வைத்திருப்பதும், அதிகாரத்தை விட அன்பின் மூலம் பணிகளைச் சிறப்பாகச் செய்யும்படி அனைவரையும் பார்த்துக் கொள்வதும், எப்பொழுதும் மன உறுதியுடன் செயல்படுவதும், பொதுமக்களின் கருத்து, தலைவர்களின் கருத்து என்னவென்று ஆராய்ந்து அறிந்து செயல்படுவதும், எந்த சூழ்நிலையிலும் மனசாட்சி படி பணியாற்றுபவராகவும், உண்மை, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, விடாமுயற்சி, எதற்கும் அஞ்சாமை என இப்படிப்பட்ட பல்வேறு பட்ட திறமைகளையும், கொள்கைகளையும் கொண்டவருமான என் அருமை அத்தானின் தீவிர திறமையாலும், விடாமுயற்சியாலும் தமிழகம், பாண்டிச்சேரி, கர்நாடகா, புது தில்லி, கேரளா ஆகிய மாநிலங்களில் வெற்றி நடைப் போட்டுக் கொண்டிருக்கும் எங்களுடைய நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் 14 ஆண்டுகள் நிறைவு பெற்று 15 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது என்பதனை இந்த நேரத்தில் மிகுந்த மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக் கொள்கிறேன். என் அருமை அத்தான் அவர்களின் பத்திரிக்கை பணியும், மக்கள் சேவைப் பணியும் மென்மேலும் சிறக்க என்றென்றும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் உங்களில் கலந்தவள் உங்கள் அன்பு பஞ்சுமிட்டாய் மனைவியின் அன்பான இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்கள்..

எங்கள் பத்திரிக்கை வெற்றி நடை போடுவதற்கு முழு ஒத்துழைப்பும், உறுதுணையும் கொடுத்த எங்கள் விஜிலென்ஸ் குடும்பத்தில் பயணிக்கும் என் உடன் பிறவா சகோதர சகோதரிகளான எங்கள் விஜிலென்ஸ் போர்படைத் தளபதிகளான நிர்வாக ஆசிரியர், செய்தி ஆசிரியர், உதவி ஆசிரியர்கள், கௌரவ ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், தலைமை நிருபர்கள், நிருபர்கள், ஒளிப்பட நிருபர்கள், சட்ட ஆலோசகர்கள்,

எங்கள் விஜிலென்ஸ் பத்திரிக்கையின் அன்பிற்குரிய வாசகர்கள், விற்பனையாளர்கள், அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள், சினிமா கலைஞர்கள், சக பத்திரிகை ஊடக நண்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவருக்கும் என் இதயம் கனிந்த மனமார்ந்த கோடான கோடி நன்றிகளை மிகுந்த மகிழ்ச்சியுடன் இதன் மூலம் இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்..

நீங்கள் அனைவரும் கொடுக்கும் மாபெரும் ஆதரவினால் மட்டுமே தான் நாங்கள் மீண்டும் மீண்டும் மாபெரும் வெற்றியை அடைய முடிகிறது என்றால் அது மிகையே அல்ல.

ஒரு பத்திரிக்கை நடத்துவது என்பது அவ்வளவு எளிதல்ல. ஒரு குழந்தை பிறப்பதற்கு சமம். அதுவும் ஒரு குழந்தை அல்ல. ஒவ்வொரு மாதமும் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து கொண்டிருக்கிறோம். ஒரு வருடத்திற்கு பன்னிரெண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்து கொண்டிருக்கிறோம். அதுவும் அந்தக் குழந்தைகள் சாதாரண குழந்தைகள் அல்ல. ஒவ்வொன்றும் வைரக் குழந்தைகள் என்றே சொல்லலாம். அதாவது ஒவ்வொரு ஆண்டும் 12 வைர குழந்தைகளைப் பெற்றெடுத்து வருகிறோம். இதுவரை நாங்கள் 14 ஆண்டுகளைக் கடந்து வந்திருக்கிறோம். எனவே இதுவரை 168 வைர குழந்தைகளைப் பெற்று எடுத்து இருக்கிறோம் என்றால் அது மிகையே அல்ல. பசி, தூக்கம் என அனைத்தையும் மறந்து கடின உழைப்போடு, விடாமுயற்சியோடு, எதற்கும் அஞ்சாமல் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு கஷ்டப்பட்டு புத்தகத்தைக் கொண்டு வருகிறோம் என்பது எங்களுக்கு மட்டுமே தெரியும். நாங்கள் முதன் முதலில் பத்திரிக்கை ஆரம்பித்தபோது என் அருமை அத்தான் அவர்களே ' ஒன் மேன் ஆர்மையாக' அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள், மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், அனைத்து காவல்துறையினர்கள், சினிமா கலைஞர்கள், விஜிலென்ஸ் வாசகர்கள், விஜிலன்ஸ் விற்பனையாளர்கள் என அனைவருக்கும் தனிமனிதனாகக் கொண்டுச் சேர்த்து எங்களுடைய நமது விஜிலென்ஸ் பத்திரிக்கையை அனைவரும் அறியும் வகையில் செய்தார் என்றால் அது மிகையே அல்ல.

பின்னர் நாளடைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் தகுதியான திறமையான துணிச்சலான நிருபர்களைத் தேர்ந்தெடுத்து எங்களுடைய நமது விஜிலென்ஸ் பத்திரிக்கை பணியில் அமர்த்தினார். இப்போது என் அருமை அத்தான் அவர்களின் சீரிய முயற்சியால் தமிழகம், பாண்டிச்சேரி, கர்நாடகா, புது தில்லி, கேரளா என பல்வேறு மாநிலங்களிலும் நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் வெற்றி நடைப்போட்டுக் கொண்டிருக்கிறது என்பதனை நினைக்கும் போது சொல்ல வார்த்தைகளே இல்லை என்னிடம். மனதில் அவ்வளவு பேரின்பம், நாங்கள் பத்திரிக்கை ஆரம்பித்த நாளிலிருந்து இப்போது வரை நினைத்துப் பார்த்தால் அப்பப்பா எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கிறோம். எப்படி 14 ஆண்டுகளைக் கடந்து வந்தோம் என்று நினைக்கும் போதே மனதில் ஏதோ இனம் புரியாத மகிழ்ச்சி எழும்புகிறது. 14ஆண்டுகள் கடந்து 15ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோமே என்று நினைத்தாலே ஆனந்த கண்ணீர் மல்குகிறது என் கண்களில்.. எவ்வளவு பணக்கஷ்டம், எவ்வளவு மன கஷ்டம், எவ்வளவு உடல் கஷ்டம் என எத்தனை எத்தனை கஷ்டங்களை அனுபவித்திருக்கிறோம். இருப்பினும் அந்த கஷ்டங்கள் அனைத்தையும் நாங்கள் ஒருபோதும் கஷ்டமாக நினைக்கவில்லை. கஷ்டப்பட்டால் தான் வாழ்க்கையில் நாம் முன்னேற முடியும் என்ற மன உறுதியோடு ஒவ்வொரு ஆண்டும் அடியெடுத்து வைத்துக் கொண்டே இருக்கிறோம்.

என் செல்ல அப்பா அடிக்கடி சொல்லுவார் கஷ்டப்படுபவர்கள் என்றென்றும் தோற்றுப் போனதாக சரித்திரமே இல்லை என்று. அதையே நான் என் அத்தானிடமும் சொல்லி சொல்லி அதையே எங்களுடைய ஊக்க மருந்தாகக் கொண்டு பணியாற்றி வருகிறோம். பலாப்பழம் எப்படி மேலே கரடு முரடாக இருக்கிறது. ஆனால் மேலே உள்ள தோலை அறுத்துவிட்டு உள்ளே உள்ள பலாச்சுளைகளை ருசிக்கும் போது எப்படி இனிப்பு சுவை அமிர்தமாக இருக்கிறதோ, அதுபோல்தான் நாம் நம்முடைய வேலையையும் சுமையாக கருதாமல் சுவையாக நினைத்தால் நம் வாழ்க்கை அமிர்தம் ஆகும் என்பதே நிதர்சனமான உண்மை.

அதில் கிடைக்கும் இன்பம் பேரின்பமாகத் திகழும். அப்படி ஒரு வேலை நாங்கள் எங்கள் வேலையைக் கஷ்டம் என்று நினைத்து இருந்தோம் என்றால் இப்படி ஒரு நல்ல விஜிலென்ஸ் குடும்பத்தையும், நல்ல மனிதர்களையும் பெற்றிருக்கவே முடியாது. நாங்கள் காசு, பணம் சம்பாதித்து இருக்கிறோமோ இல்லையோ? நல்ல மனிதர்களைச் சம்பாதித்து இருக்கிறோம் என்பதே எங்களுக்கு மிகுந்த பேரின்பம்.

இன்னும் கஷ்டப்பட்டு கொண்டு தான் இருக்கிறோம். கஷ்டப்படுவதற்கு நாங்கள் என்றும் தயங்கியது இல்லை. கடவுள் எங்களுக்கு நிறைய தேர்வுகளைக் கொடுக்கிறார். அனைத்து தேர்வுகளிலும் வெற்றி பெற்று கடவுளின் குழந்தைகளாக என்றென்றும் வலம் வருவோம். போதும் என் குழந்தைகள் தேர்வுகள் அனைத்தையும் முடித்து விட்டார்கள் என்று கடவுளுக்கு எப்போது தோன்றுகிறதோ அப்போது எங்களுக்குத் தேர்வுகளை நிறுத்தட்டும். அதுவரை தேர்வுகளை சந்திக்க நாங்கள் தயார். அந்தத் தேர்வுகளைச் சந்திப்பதற்கான ஊக்கத்தையும் ஆக்கத்தையும் கொடுப்பதே நீங்கள் தானே (கடவுள்)ஐயா. நம்புகிறவனுக்கு கடவுள் இருக்கிறார். நம்பாதவனுக்கு கடவுள் இல்லை.

நமக்கு மேல் ஒரு சக்தி இருக்கிறது. அந்த சக்தியை நமக்கு பிடித்தபடி கடவுளாக இன்றி எண்ணி நமக்கான பாரத்தை சக மனிதர்களிடம் பகிர்ந்து கொள்ளாமல் கடவுளிடம் பகிர்ந்து கொண்டு நமக்கான வேலையை செய்வோம். கண்டிப்பாக பலன் உண்டு. நாங்கள் எங்கள் எட்டாகனியை அடையும் வரை, இல்லை இல்லை அடைந்த பின்பும் உழைக்கத் தயங்க மாட்டோம். எங்கள் உயிர் உள்ளவரை எங்களின் உயிர் மூச்சான நமது விஜிலென்ஸ் பத்திரிகைக்காக உழைப்போம்.. உழைப்போம்... உழைத்துக் கொண்டே இருப்போம்.... கண்டிப்பாக எங்கள் எட்டாக்கனியை விரைவில் எங்கள் விஜிலென்ஸ் குடும்பத்துடன் அடைவோம் என்பதில் எங்களுக்கு சிறிதும்

ஐயமில்லை. இது போதும் என்று நாங்கள் நிறுத்த மாட்டோம். போதும் என்ற மனம் வந்து விடாமல் இன்னும் நிறைய தேடல்களைத் தேடினால் மட்டுமே வாழ்வில் மிகப்பெரிய உயரத்தை அடைய முடியும். எங்கள் தேடலை நாங்கள் நிறுத்த மாட்டோம். ஒவ்வொரு படியாக ஏறினால் வெற்றி கண்டிப்பாக நிச்சயம். அதை விட்டு அகலக் கால் வைத்தால் உடனே சரிந்து விழுந்து விடுவோம். படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறுவது மட்டும் தான் நிலையாக நிலைத்திருக்கும். நாங்களும் அப்படி படிப்படியாக முன்னேறுவதை மட்டுமே விரும்புகிறோம். எங்களுக்கு கை கொடுத்து எழுப்பி விட யாரும் இல்லை. அத்தானுக்கு நானும், எனக்கு அத்தானும் கை கொடுத்து எழும்பி வருகிறோம். அப்படி எழும்பின எங்களை இப்போது கைக் கொடுத்து தூக்கி விட எங்கள் விஜிலென்ஸ் போர்படைத் தளபதிகள் இருக்கிறார்கள் என்று நினைக்கும் போதே எங்களுக்கு மனதில் பேரானந்தமாக இருக்கிறது. இது எங்களுக்கு எவ்வளவு பெரிய சந்தோஷம். சாதித்து காட்டியுள்ளோம்..

நல்ல மனிதர்களைப் பெற்றுள்ளோம் என்பதில் சாதித்து காட்டியுள்ளோம். பணம் காசு யாருக்கு வேண்டும். அது இன்னைக்கு வரும் நாளைக்குப் போகும். ஆனால் நல்ல மனிதர்கள் என்றென்றும் மாறவே மாட்டார்கள். அந்த நல்ல மனிதர்களை நாங்கள் பெற்றுள்ளோம் என்பதில் கர்வம் கொள்கிறோம்.. போகும்போது நாம் எதைக் கொண்டுப் போகப் போகிறோம். வாழும் வரை நம்மால் முடிந்த நல்லதை செய்வோம். இந்த மண்ணை விட்டு நாம் சென்றாலும் நம் பெயர் நிலைத்திருக்கும். நம் உயிர் இல்லை என்றாலும் நம் பெயர் என்றென்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கும். அப்படிதான் எங்களுடைய நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ், விஜிலென்ஸ் டிவி, விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை காலம் காலமாக பெயர் சொல்லும் அளவிற்கு இன்னும் நிறைய சாதிக்க நாங்கள் கடவுளை வேண்டுகிறோம்..

“அஞ்சுவது யாதொன்றும் இல்லை ஆண்டவனைத் தவிர” என்ற தாரக மந்திரத்தோடு அரசு செய்திகள், அரசியல், சமூகம், கல்வி, கலை, இலக்கியம், பண்பாடு, தொழில்நுட்பம், மருத்துவம், சினிமா, ஆன்மீகம், விளையாட்டு, வர்த்தகம், வானிலை, உலகச் செய்திகள், மக்கள் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், அநீதிகள் என இவைப் போன்ற இன்றியமையாத செய்திகள் அனைத்தையும் மக்களுக்குத் துல்லியமாகவும், நேர்மையாகவும், விரைவாகவும், வெளிப்படையாகவும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதும், சேர்ப்பதும்,

அச்சமின்றி அநீதிகளை எதிர்த்து நேர்மையுடனும் எதற்கும் அஞ்சாமலும் அனைத்தையும் அலசி ஆராய்ந்து

“ கத்தி முனையை விட பேனா முனை கூர்மையானது “ என்பதனை நிரூபித்துக் கொண்டு “ எழுதுவது எங்கள் கடமை எழுதுகோல் எங்கள் மனசாட்சி “ என்று உண்மையை உரக்கச் சொல்லிக் கொண்டு வீர நடை போட்டுக்கொண்டு வெற்றி நடை போடுகிறது எங்களுடைய நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் என்பதில் பெருமிதமும் கர்வமும் கொள்கிறேன்..

அதேபோல் அனைத்து இதழ்களுக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது எங்களுடைய நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் என்றால் அது மிகையே அல்ல..

எங்களுடைய ‘நமது விஜிலென்ஸ் பத்திரிக்கை’ பத்திரிக்கை துறையில் கின்னஸ் சாதனைப் படைக்க வேண்டும். அதேபோல் பத்திரிக்கை துறையின் உயரிய விருதான “புலிட்சர்” விருது பெற வேண்டும் என்பதே எனது மாபெரும் ஆசை. விரைவில் உங்கள் அனைவரின் அன்போடும், ஆசியோடும், ஆதரவோடும் சாதித்து காட்டுவோம் என்பதில் சிறிதும் ஐயமும் தயக்கமும் இல்லை எனக்கு.

நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழுக்கு உங்கள் அனைவரின் மேலான ஆதரவினை எப்போதும் போல் எங்களுக்குத் தொடர்ந்து அள்ளித் தாருங்கள்..

வாங்கிப் படியுங்கள் நமது விஜிலென்ஸ்..

பார்த்து மகிழுங்கள் விஜிலென்ஸ் டிவி..

இணைவீர் விஜிலென்ஸ் மக்கள் இயக்கத்தில்..

பயன்படுத்திக் கொள்ளுங்கள் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளையை..

என்றென்றும் அன்புடன் உங்கள் அன்பு சகோதரி

பத்திரிக்கை உலகின் தங்கத் தாரகை, சேவாரத்னா, அம்பாசிடர்,

விஜிலென்ஸ் DR. பா.தமிழ் பாரதி ஆனந்தன்., B.SC.,M.A.,M.Phil.,DTP.,PGDCA.,

நமது விஜிலென்ஸ் இதழ் / விஜிலென்ஸ் டிவி - இணை ஆசிரியர்.

விஜிலென்ஸ் மக்கள் இயக்கம்-மாநிலப் பொருளாளர்.

NAMATHU VIJILENCE Owned and Published by Vijilence DR.D.ANANDHAN, 78/25, Ferry Ghat Road, Musiri - 621 211, Trichirappalli District. Printed at CHENNAI OFFSET PRINTERS, 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. Founder/Publisher/Editor : Vijilence DR.D.ANANDHAN. Cell : 89734 15000.

All Rights Reserved Legal Jurisdiction in Trichy City Court Only. Nothing in Namathu Vijilence is intended to defame any person. But expressed in Good Faith, Pursuit of Truth and Public Good.